
"MATHAR MARUMANAM."

# மாதர் மறுமணம்



மலர் 3. இதழ் 8.

வெகுதானிய பங்குனி

Annas 1½ 10 Cts.

# "மாதர் மறுமணம்" சந்தா விபரம்.

வருஷ சந்தா இந்தியா, சிலோன் முதலிய
உள்நாட்டுக்கு ... ரூ. 1—0—0

பர்மா, மலாயா, சைகோன், தென்னுபிரிக்கா முதலிய
வெளிநாட்டுக்கு ... ரூ. 1—8—0

தனிப்பிரதி ... ... ரூ. 0—1—6

வி. பி. மூலம் அனுப்ப இயலாது. முன்பண மாகவே செலுத்த வேண்டும். வெளிநாட்டிலுள்ளவர்கள் 2 ஷில்லிங் 6 பென்ஸ் அனுப்ப வேண்டும்.

விலாச மாறுதலுக்கு சந்தா எண்ணைக் குறிப்பிட்டு கடிதமெழுதவும். மாதிரிப்பிரதி வேண்டுவோர் $1\frac{1}{2}$ அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

காரியதரிசி,

மாதர் மறுமண சகாய சங்கம், காரைக்குடி.

# உள்ளுறை


'இந்து அனாதைப்பெண் விடுதி' வேண்டும்

—(காளவனப் புலவர்) .... 1

பத்மாக்ஷி—ச. முனிசாமி பிள்ளை .... 7

மாதவன் —குன்றை மு. பேத்தையா .... 13

விஜய லக்ஷ்மி—எட்டயாபுரம் S. சுப்பையா பிள்ளை .... 17

கமலாவின் வெற்றி—அ. வே. அ. .... 27

காதலா, காமமா?—பி. தனுஷ்கோடி .... 31

கர்ப்ப ஸ்திரீகளைக் காப்பாற்றுவது .... 39

விதவையர்க்கு மணம் ஆற்றுங்கள் .... 41

துணிந்தோர்க்குத் துக்கமில்லை—காதிபந்தர்

டி. கே. முத்துசெட்டியார் .... 42

நிகழ்ச்சிகள் .... .... .... .... .... 44

# குமரன் புத்தகசாலை.

## வ. உ. சிதம்பரம் பிள்ளை எழுதியது.

| | |
|---|---|
| மனம்போல வாழ்வு | 0-8-0 |
| திருக்குறள் (அறத்துப்பால்) | 1-0-0 |
| மெய்யறம் | 0-8-0 |
| சாந்திக்கு மார்க்கம் | 0-8-0 |
| அகமே புறம் | 0-8-0 |
| மெய்யறிவு | 0-8-0 |

## வ. வே. சு. ஐயர் எழுதியது.

| | |
|---|---|
| சந்திரகுப்த சரித்திரம் | 0-6-0 |

## இதர புத்தகங்கள்.

| | |
|---|---|
| ஞான வாசிட்ட மூலமும் உரையும் 2 பாகமும் | 6-0-0 |
| நைடதம் மூலமும் உரையும் | 4-0-0 |
| சிதம்பர ரகசியம் | 0-8-0 |
| உப்பள முற்றுகை | 0-4-0 |
| பக்தியோகம் | 0-8-0 |
| தேவோபாசன தீபம் | 0-6-0 |
| பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை (சீர்திருத்தக்கதை) | 0-4-0 |
| மநுநீதி மர்மம் | 0-2-0 |
| ரோமியோ ஜூலியட் (ஷேக்ஸ்பியர் நாடகக் கதை செய்யுள்) | 0-4-0 |
| இகபரஞானசாகரத் திரட்டு | 0-6-0 |
| பெரிய விக்கிரமாதித்தன் கதை | 1-0-0 |
| தாசிகள் மோச வலை (நாவல்) | 1-4-0 |
| நந்தனார் கீர்த்தனை | 0-4-0 |
| தோத்திரக்கோவை | 0-6-0 |
| இராமாயண ஆராய்ச்சி | 0 4-0 |
| சொர்னவல்லி | 0-12-0 |
| கூழைரங்கன் | 0-12-0 |
| அமிர்தவல்லிமாலை | 0-3-0 |
| நமது பலசரக்குக்கடை | 0-6-0 |
| நாயன்மார் | 0-3-0 |
| குட்டிச்சாத்தான் கட்டுரைகள் | 0-3-0 |
| பதிற்றுப்பத்தந்தாதி | 0-3-0 |
| மாதர்மறுமணம் | 0-4-0 |
| பத்மநாதன் அல்லது களவுபோன வைரப்பதக்கம் | 0-12-0 |
| மானநஷ்ட வழக்கு | 0-1-0 |
| ஜீவகாருண்யத் திருக்குறள் | 0-6-0 |
| ஜீவகாருண்யப்பாடல் திரட்டு | 0-3-0 |
| சந்திரமதி அல்லது தற்காலத்து தமிழ் மகள் | 0-2-0 |
| கைம்பெண்ணின் கண்ணீர் | 0-1-0 |
| தேசிய கீதங்கள் | 0-2-0 |
| காசில்லாமல் உபதேசம் | 0-1-0 |
| பலதிரட்டு | 0-1-0 |
| கடவுளும் கோயிலும் | 0-1-0 |
| சமரச சன்மார்க்க தோத்திரத்திரட்டு | 0-4-0 |
| சைவசமய சாரம் | 0-1-0 |
| சுயராஜ்யம் யாருக்கு? | 0-1-0 |
| மாதர் மறுமணப் பாடல் திரட்டு | 0-2-0 |
| அநியாயக் கல்யாணம் | 0-0-6 |
| இரண்டு கட்டுரைகள் | 0-1-0 |
| தமயந்தி நாவல் | 0-8-0 |
| சோதிடப் புரட்டு | 0-2-0 |
| சுயமரியாதைத் தாலாட்டு | 0-2-0 |
| புராண ஆபாசங்கள் | 0-3-0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0-2-0 |
| சுயமரியாதைத் தத்துவ கீதங்கள் | 0-3-0 |
| சுயமரியாதைப் பாடல் | 0-2-0 |

**மானேஜர், 'குமரன்' ஆபீஸ், காரைக்குடி.**

சிவகுருநாதன்,
செந்தமிழ் நிலையம்.
கும்பகோணம்.

# மாதர் மறுமணம்.

பத்திராதிபர்:— மு. மரகதவல்லி.

| மலர் 3 | காரைக்குடி<br>வெகுதானிய-௵ பங்குனி-௴ | இதழ் 8 |
|---|---|---|

## ‘இந்து அநாதைப் பெண் விடுதி’ வேண்டும்

(காளவனப் புலவர்)

கடிமண நாளில் இடிமினல் போலக்
கடிதில் மறைந்த ஓர் கன்னியின் கடிதம்

வஞ்சி நாட்டிலே பம்பை யாற்றங்கரையை யடுத்த ஒரு குக்கிராமத்திலே ஞானசம்பந்த முதலியாரென்பார் ஒரு பெரிய பிரபு ஆவர். இவருக்கு ஒரே மகள்; ஞானவல்லி அம்மாள் எனப்படுவள். இவள் கல்வியும் பேரழகும் பெருங்குணமும் நிறைந்து பதினாட்டைப் பருவமுடைய வளாயிருந்தாள். விவாஹ காரியத்தை இனித் தாழ்த்திவைத்தல் கூடாதென முதலியார் எண்ணினர். இலங்கையில் வர்த்தக விர்த்தியிலிருந்த தன் தங்கை மகனான ஞான சிகாமணி முதலியாரை வரவழைக்க, மைத்துனரான ஞானஸ்கந்த முதலியாருக்கு அவர் கடிதம் அனுப்பினர். ஞானஸ்கந்த முதலியார் உடனே இலங்கைக்குச் செய்தியனுப்ப, மகன் பாண்டி நாட்டிலே தன் வீடுவந்து சேர்ந்தான்.

வஞ்சி பூமியிலே பெண் கிரகத்தில் வைத்து முறைப்படி நிச்சய தாம்பூலம் நடந்தது. விவாஹத்திற்குச் சின்னாள் முன்னர் ஒரு தினத்தில் சமையலறையில் ஞானவல்லி சில பலகாரங்களைச் செய்து கொண்டிருந்தாள். அடுப்பிலிருந்த எண்ணெயானது முறுகி விட்டதால், சட்டியில் தீப்பற்ற விருந்த நிலைமையை அவள் அறிந்தாளில்லை. அவள் ஜலமயமாயிருந்த மாப் பதார்த்தைக்

கோரிச் சட்டியில் வார்த்தனள். வார்த்ததும், சட்டியிலிருந்த எண்ணெய் முழுவதும் அக்கினிமயமாய் அவளது முகத்தில் தாவியது. எரிந்த முகத்துடன் ஓவென்றலறித் தரையில் வீழ்ந்து துடிதுடித்த அவளது முகத்திலே ஜலமிறைக்கப்பட்டுத் தீயணைக்கப்பட்டது. சுமார் மூன்று மாதத்திற்கு நீண்டு நின்றது சிகிச்சை. முடிவில் அன்றலர்ந்த செந்தாமரையை நிகர்த்த அவளது முகம் கரியடர்ந்த கொள்ளிக்கட்டை போல் மாறிவிட்டது.

ஞானவல்லியும் ஞானசிகாமணியும் பால்யம் முதற்கொண்டு ஒன்ருயிருந்து ஒரு கலத்திலுண்டு ஒருமித்து விளையாடி ஒரே பள்ளியிற் கற்றுத் தம்மில் நேசித்தவர்கள். பிற்காலத்திய வாழ்வும் அப்படியே நடக்குமென்றும் நடத்தவேண்டுமென்றும் நம்பி ஆர்வங்கொண்டிருந்தாள் ஞானவல்லி. விசேஷித்தும் அவள் தனக்கு நேர்ந்த ஆபத்திலும், ஞானசிகாமணி ஒருவனையே மனத்திருத்திச் சமாதானப்பட்டிருந்தாள். ஆனுல் ஞானவல்லியின் முகம் விகாரப்பட்டு விட்டதில் வெறுப்படைந்த ஞானசிகாமணி இப்பொழுது வேருெரு பெண்ணை மணஞ்செய்து அவளோடு இலங்கைக்குப் போய்விட்டான்.

மேற்குறித்த செய்தியை யறிந்தாள் ஞானவல்லி. அவள் மனம் எப்படி இருக்கும்? மனந் தத்தளிக்க முகத்தில் இரத்தக் கண்ணீருஞ் சிந்தியது; கற்றவளாதலின் அம்மட்டில் அடக்சிக் கொண்டனள். சம்பந்த முதலியாரோ கோபாவேசம் கொண்டவராய் உடன்ருனே வேருெரு வரனைத் திட்டஞ் செய்தார். வரதக்ஷிணையாக ஐம்பதினுயிரம் ரூபாய் ரொக்கங் கொடுப்பதாகவும் வாக்களித்தார். இரண்டாவதும் நிச்சய தாம்பூல வைபவம் நடந்தேறியது.

இந்த விவாஹத்தை ஞானவல்லி விரும்பவில்லை. தன்னுலான மட்டுந் தடுத்தனள்; நலவு கூறினள்; நிற்கவில்லை விவாஹ தினமோ விரைந்தடுத்தது. விவாஹத்திற்காக அருணோதய முகூர்த்தம் வைக்கப்பட்டிருந்ததால், அதிகாலையில் பெண்ணை மணக்கோலஞ் செய்வதற்காகச் சில பெண்கள் படுக்கையறையிற் சென்று பார்த்தனர்; காணவில்லை; எங்குந் தேடியும் ஒருவிபரமும்

அறிவதற் கியலாதாக, மணவீட்டிலுண்டான குழப்பத்திற்கும் எல்லையில்லா தாயிற்று.

கல்யாண அழைப்புக் கடிதம் பெற்ற அநேகர் அது சமயம் அயலூர்களிலிருந்து வந்துகொண்டிருந்தனர். அவர்களிற் சிலர் தாங்கள் படகேறி 10—12 மைல் தூரத்திற்கப்பால் பம்பையைத் தாண்டும்போது பம்பையின் ஜலப் பிரவாகத்திலே ஏதோ ஒன்று கறுப்புப் புடவையாற் சுற்றப்பட்டு மிதந்து செல்வதைக் கண்டதாகக் கூறினர். பின்வந்த பலரும் தாங்களுங் கண்டதாகக் கூறி அதை உறுதிப்படுத்தினர். அவர்களது உண்மைக் கூற்றால் ஞானவல்லியம்மாள் பம்பா நதியில் தன் ஜீவனைப்போக்கி விட்டாளென்ற விபரம் வெளியாயிற்று. பிரேதத்தைக் கண்டெடுக்க ஓடி வள்ளத்தில் (விரைந்து செல்லும் சிறு படகு) ஆட்கள் சென்றும் பிரயோசனப் படவில்லை. வந்த ஜனங்களெல்லாம் ஞானவல்லி அம்மாளுக்கு நேர்ந்த மரணத்தை எண்ணிக் கண்ணீருகுத்து வீடு திரும்பினர்.

இது இவ்வாருக, அங்கு பிரத்தியேக விடுதியில் தங்கியிருந்த மாப்பிளை பாவநாச முதலியார்—தன்னிடம் வாக்குத் தத்தஞ் செய்தபடி வரதக்ஷிணை ரூபாய் ஐம்பதினுயிரத்தையும் உடனே செலுத்தி விடவேண்டுமென்றும், இல்லையேல் வழக்கிட்டு நஷ்ட பரிகாரத்துடன் வசூல்செய்ய நேரிடுமென்றும் சம்பந்த முதலியாருக்கு ஒரு நோட்டீஸ் விடுத்தனர். மகளைப் பறிகொடுத்த ஏக்கத்திலிருந்த முதலியார் இதைக்கண்டதும் பணமும் பறிபோய் விடுமோ என்று பயந்தனர். உடனே ஒரு பெரிய வக்கீலிடம் ஆலோசித்து அந்த வக்கீல் வழியாகவே வரனென்று பேசிய போது வரதக்ஷிணை யென்ற பேச்சு நிகழ்ந்தது நியாயமென்றும், வரன் ஆவதற்கான சந்தர்ப்பம் அழிந்தபோதே 'வரதக்ஷிணை' என்ற பேச்சே அழிந்துபோனமையால் நோட்டீஸில் கண்ட வாதம் செல்லத் தக்கதல்லவென்றும், மீறி அநியாயமாக ஒரு தாவா ஏற்பட நேரிடுமானல் அதுபற்றி வருகிற சகல நஷ்டங்களுக்கும் தாமே பொறுப்பாளியாக நேரிடுமென்றும் ஒரு எதிர் நோட்டீஸை அவர் பாவநாச முதலியாருக்கு அனுப்பினர். அது

பெற்ற பாவகாசமும் அவரது ஆட்களும் பெரும் பணமிழந்த பெருஞ் சங்கடத்திலாழ்ந்து தம் ஊருக்குத் திரும்பலாயினர்.

நாட்கள் கடந்தோடின. முதலியாரும் மனைவியும் உயிர்ப் பிணங்களாகவே இருந்து காலந்தள்ளினர். மூன்று மாதத்திற்குப் பிறகு முதலியாருக்கு ஒரு தபாற் கடிதம் கிடைத்தது. விலாசம் தன் மகள் கைப்பட எழுதப்பட்டிருந்ததால் ஆத்திரத்துடன் உற்று நோக்கினர். கீழ்வரியில் 'ஞானவல்லி வகை' என்று எழுதப்பட் டிருந்தது கண்டார். கணையாழியைக் கண்ட ஜானகியும் சூடா மணியைக் கண்ணுற்ற இராமபிரானும் அடைந்த நிலையைக் கம்பர் கூறியவாறே ஈண்டு முதலியார் ஒருங்கே அடைந்தன ரென்பது மிகையன்று. ஆனந்த பாஷ்பம் பெருக் கெடுத்தொழுக அவர் மனைவியை நோக்கி, "அடியே! ஓடிவா, ஞானம் சாகவில்லை! சாகவில்லை!! சாகவில்லை!!!" என்று சொல்லிக்கொண்டே கடி தத்தைத் திறந்தார். அக்கடிதம் வருமாறு:—

இரட்டைக் குறள் வெண் செந்துறை.

(1) அப்பா!யான் சொல்வதுகேட் டகங்கனிய வேண்டும்
அடியேன்செய் பிழையனைத்தும் பொறுத்திடவும்
வேண்டும்
இப்பாரில் இன்றுமுளேன் என்றறிதல் வேண்டும்
என்—தாய்க்கும் இச்செய்தி இயம்பிடவும் வேண்டும்.

(2) வந்தனங்கள் பலசெய்தேன் வாழ்த்துகின்றேன் அடியேன்
வஞ்சனைசூ தாதிகுணம் மனங்கொளுவும் அறியேன்
நிந்தனைக்கென் வாழ்க்கையினை நேர்ந்திடச்சம் மதியேன்.
நீதியலா தியாதொன்றும் நெஞ்சினிலுங் குறியேன்.

(3) அத்தைமகன் கைப்பிடிப்பான் என்றிருந்தேன் பாவி
அஃதறிந்த விதிச்சனியன் அக்கினியாய் மாறி
மூத்தமிட்டான் உருக்குலைத்தான் முகத்தழகுங் கெடுத்தான்
முழுக்கதையும் நீரறிவீர் மொழிவதனி ஏனோ!

(4) தீவினையேன் தீவிழுந்து சீரழிந்த அன்றும்
திட்டம்பேசி அருகிருந்து சிறப்பிடுவன் என்றே

காவினிலே இலவதனைக் காத்தகிளி போல்யான்
காத்திருந்(து)எ மாறிமனக் கலக்கமிக அடைந்தேன்

(5) கண்ணுமிமை யும்போலே எண்ணிடவே அந்தக்
காலமுத விதுகாறுங் காட்டிவைத்த உண்மை!
வெண்ணெய்திரள் போதினிலே தாழியுடைந் தாற்போல்
மீளாதபடி சிந்தி விண்பறந்து போச்சே!

(6) அன்பின்-உரை கல்லென்பார் துன்பதனை ஆன்றோர்
அவ்வுரையின் மெய்ப்பொருளை யறிந்துகொண்டேன்
ஐயா!
இன்புதரும் அன்பியலா வம்பரையே அஞ்சி
எண்ணிறந்த வனிதையர்தா மிரங்குதல்கா ணீரோ?

(7) வடிவிழந்த மடந்தையினை வதுவைகொள ஒருவன்
வருவனெனில் அவன்கண்டீர் பொருள்பறிக்குங் கள்
[வன்
படிமிசையிப் பாதகனுக்கு குவமைசொல் மூன்றும்
பாதலத்தும் வேறிடத்தும் பார்த்தலரி தென்பார்.

(8) உரிமை பெற்றோன் உறுதியிட்டும் ஒருவிவிட்டானாயின்
உரிமையற்றுப் பொருள்விரும்பும் ஒருவனுக்கோ
[என்னை
பெருமைகெட வாழ்க்கையிட்டுப் பெண்டாக்க நின்றீர்
பீடுறுமோ? அடியேனைப் பேணுவனோ? ஐயா!

(9) எனைமணப்போன் பிறகொருத்தி தனைமணந்தம் மாதை
என்பொருளா லலங்கரித்தே இன்புறுதல் கண்டு
முனைக்கொம்புத் தேன்விரும்பும் முடவனைப்போல் யானும்
மூச்சுவிட்டுப் பயனுண்டோ? மொழிந்திடுவீர் ஐயா!

(10) அங்கமிழந் தழிவாரை அருவருக்கும் அவரே
அழுகியபுன் யலங்கிடக்கும் மணியைஎடுத் தணிவார்.
இங்கவர்தம் கதையுரைக்க என்னுண்டு நியாயம்?
என்கதையே பாரதத்திற் கிரட்டிஇருக் கச்சே.

(11) அழகழிந்த எனையொருவர் ஆர்வமுறு ரென்றே
யறிந்ததுவும் யானெதுங்க வேண்டாவோ? ஐயா!

பழங்கதைபோல் பலமுறையும் பகர்ந்தனனே! யாதும்
பயனிலையென் றுனதுவும் பயநிலையி லானேன்.

(12) இந்நிலையில் யானொதுங்க இடமெங்கே? காட்டீர்
எனைப்போல்வார் பலகோடி இரங்குறுமிந் நாட்டில்
மன்னுமடம் பலவாக மடச்சொத்தும் நேடி
மடத்தருமம் வகுத்தவர்கள் மங்கையர்க்கென் செய்தார்?

(13) எம்மதமும் சம்மதமென் றிசைத்திடுவ தான
இந்துமதந் தனைநழுவி இயேசுபதம் நம்பும்
இம்மகளை வெறுக்காதீர் இத்தருணம் உய்ய
இதுவன்றி வேறுமதம் இசைந்திடுமோ? கூறீர்.

(14) தாய்நாடு விட்டுவந்து பெல்ஜியத்தாய் மார்கள்
தங்குகின்ற மணிமலைக்கன் னிகைமடத்தை யுன்னிப்
பேய்நாடும் நள்ளிருளில் பேயெனவெ சாடி
பீடைபல சகித்தேனதி காலைமடஞ் சார்ந்தேன்.

(15) சித்திரைபத் தாமுதயச் செங்கதிரைக் கண்ட
செழுங்கமல மெனமுகமுஞ் சிறுநகையை யரும்பிப்
பத்தரைமாற் றொளிவீசப் படியணைந்து நின்ற
பதுமைநிகர் தாய்ப்பதத்தைப் பணிந்துகண்ணீர்
விடுத்தேன்.

(16) கன்றலறக் கலக்கமுறுங் காராவைப் போன்றே
கரத்தாலெனை யணைத்துமனங் கசிந்துருக மடத்துள்
சென்றெனையு மிருத்தியுற்ற செய்தியெலாங் கேட்டாள்
திருத்தமுற அனைத்துமவர்க் கெடுத்துரைத்தேன் ஐயா!

(17) மடியிருந்த நகைப்பொதியும் அடிபணிந்து வைத்தேன்
மலர்க்கண்கள் நீர்சொரிய அவிழ்த்தெடுத்துப் பார்த்தாள்
மடம் வகைக்காய் 'ஞானவல்லிதருமம்' என்று குறித்தாள்
வரிசைபெற எனையுமங்கே மகிழ்ச்சிகொள வைத்தாள்.

(18) அங்குபுலைச் சிறுமியர்கட்(கு) ஆசிரியை யானேன்
அவர்களெனைத் தாயர் என்றே அழைத்திடுதல் கேட்டுப்
பொங்குறு பேரின்பதனுல் புளகமுற்று வாழும்
'புனிதமுற்ற புதுவாழ்வைப் போந்திங்கே காண்பீர்.

(19) இந்துமதம் என்றுமதம் பேசியிறு மாந்தோர்
இரக்குமதம் ஆக்கியின்று பரக்கவிழிக் கின்றார்
நிந்தையிட்ட ஜாதிமதம் அத்தனையு மிந்த
நிமிஷத்தே தட்டியுடைத் தெறிவாரோ ஐயா!

(20) தன்னலத்தைப் பேணவென்றே சாஸ்திரங்கள் செய்தார்
தாய்பிள்ளை களைப்பிரிக்க ஜாதிமதம் வகுத்தார்
இன்னுமிந்தப் பாரதத்தாய் இரங்கியழ அந்தோ!
என்னவென்ன செய்வாரோ! யாரறிவார் ஐயா!

(21) தீண்டாமை என்றினியும் பூச்சாண்டி காட்டிச்
சிறகை இந்து மதத்திலொட்டிப் பறத்தாமல் நாங்கள்
பூண்டாளும் உரிமையெல்லாம் பூட்டிநலம் பேணப்
போந்திங்கே பார்த்துமதம் போற்றுவரோ ஐயா!

(22) அப்பாவே! அன்புறைந்த அன்னையரே நீவிர்
அடியேனுக் காயிரங்கித் துடியாதீர் ஈசன்
தப்பாமல் எவ்வுயிரும் தற்காத்துக் கொள்வான்
தடையில்லை நாட்டினுக்கே கடமைசெய வாழ்வீர்!

---

## பத்மாக்ஷி

(ச. முனிஸ்வாமி பிள்ளை)

மந்தமாருதம் மிகு உல்லாசமாக வீசிக்கொண்டிருந்தது. பத்மாக்ஷியும் அவளது தாதி தர்மாம்பாளும் தோட்டத்தில் உலாவிக்கொண்டே, அங்குள்ள புஷ்பங்களைக் கொய்தபடி காலங் கழித்தார்கள். 'ஆனால் அடுத்துக்காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' என்பதுபோல பத்மாக்ஷியின் மனத்திலுள்ள துயரத்தை அவள் முகம் பிரதிபிம்பமாய்க் காட்டிற்று. அவளுடைய அழகுக்கும் கல்விக்கும் குணத்திற்கும் அவளை விரும்பாத ஆண்களில்லை. ஆனால் அவளுடைய பெற்றோர்கள்

அவளை தங்கள் பந்துவாகிய ஒரு வயோதிகருக்கு மணம் செய்து வைத்தார்கள். வயோதிகரான வாசுதேவருக்கு தன் மனைவி மீது எப்போதும் சந்தேகந்தான். ஒரு நிமிடமும் அவள் தன்னை விட்டுப் பிரிய மனம் ஒப்பமாட்டார். இவரை மணந்த நாள் முதல் தன் தாய்வீடே சென்றறியாள். பத்மாக்ஷி யாராவதொரு ஆடவரை வழியிற் கண்டாலும் வீட்டிற்கு வந்தவுடன் "அவனை ஏன் உற்றுப் பார்த்தாய்? கழுதை! உன் சங்கதிதான் தெரியுமே" என்று உதாசீன வார்த்தைகளால் திட்டி உதை தப்பாமல் கொடுப்பார். எனினும் அவ்விதக் கொடூர வாழ்க்கையை பத்மாக்ஷி மனச் சமாதானத்துடன் சகித்துவந்தாள்.

இவள் குணத்திற்கு தக்காப்போல் தர்மாம்பாள் அவளிடம் வேலைக்கமர்ந்தாள். தர்மாம்பாள் பால்யத்திலேயே விதவையாகி விட்டபடியால், இல்லறம் என்பதை குருடன் சூரியனைக் காண்பது போல் இருந்தாள். பாலிய விதவையானதால் அவளைப் பல சீர்திருத்தக்காரர் வரிக்க முன்வந்தனர். ஆனால் தர்மாம்பாள் "கணவன் மனைவி என்பது உயிரும் உடம்புமாம். கணவன் பிரிந்தால் மனைவி கட்டைப் பிணம்" என்று சொல்லிக்கொண்டு பத்மாக்ஷியிடமே இருந்துவிட்டாள். இருவருக்கும் எஜமானி வேலைக்காரி என்ற வித்தியாசமே இல்லை. அன்பெனும் பாசத்தால் இணைக்கப்பட்டிருந்தனர். தர்மாம்பாளே சகல காரியங்களையும் கவனித்து வந்தாள். இவ்விதம் இருவரும் மலர்களை கொய்து அதைக் கோர்த்துக்கொண்டே வந்தனர்.

தோட்டத்தில் ஓர் பாகத்தில் போடப்பட்டிருந்த ஆசனத்தில் பதினன்கு வயதிற்கு மேற்படாத ஓர் யௌவன நங்கை படுத்துக்கொண்டு பொருமிக்கொண்டிருந்தாள். அவள் கூந்தல் அவிழ்ந்து தரைமேல் தொங்கிக்கொண்டிருந்தது. மதியைப் பழித்த முகத்தில் கண்ணீர் அருவியாய் வழிந்துகொண்டிருந்தது.

"ஆ! என்ன கம்பீரமான தோற்றம். நான் அவரை மறக்கலாமென்றாலும் என் மனம் அவரையே நாடுகின்றது. ஏனோ என் தந்தையார் அவர் எழுதின கடிதத்தை வாங்கி வாசிக்காமல் தேவையில்லை என்று திருப்பிவிட்டார். அதில் என் தந்தையாரின் சம்மதத்தைப் பெற விரும்பினரே. என் தந்தையின் உத்திரவைப்

பெற்றுத்தானே அவர் இங்கு வந்தார். ஏன் என் தந்தை இப்பொழுது அவரை இவ்விதம் நடத்தவேண்டும். அவருடைய மனோகரமான வதனமும் களங்கமற்ற பார்வையும் என் மனதை அசைத்தனவே. அவர்களிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு ஊருக்குச் செல்லும்போது என் மனம் என்னபாடு பட்டது. அன்று முதல் என் ஆத்மா அவர் உறையும் அரங்கமாயிற்றே. ஜெகத் ரட்சகா! ஆபத் பாந்தவா! அடியாள் மீது இன்னுமேன் கோபம்" என்று புலம்பினாள்.

அவ்வழி வந்த பத்மாக்ஷியும், தர்மாம்பாளும் தலைவிரி கோலமாய்க் கிடந்த பாக்கியவதியைக் கண்டு அவள் சொல்லிய எல்லா வார்த்தைகளையும் மறைவில் நின்று கேட்கவே, அவர்களை அறியாமலே அவர்கள் கண்களினின்றும் ஜலம் வடியலாயிற்று. பின்னர் மனதைத் தேற்றிக்கொண்டு பாக்கியவதியிடம் வந்து, அவளைத் தூக்கி உட்காரவைத்துக் கண்ணீரைத் துடைத்து "ஏனம்மா அழுதுகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்கள்.

"ஒன்றுமில்லை" என்று சொல்லி பெண்களுக்கு இயல்பாயுள்ள நாணத்தால் தலை கவிழ்ந்தாள் பாக்கியவதி.

தர்மாம்பாள், "அம்மா பாக்கியம்! மணம் செய்து நாங்கள் இருவரும் படும் கஷ்டத்தைக் கண்டு, இந்த உலக சுகங்களை வெறுத்து கன்னிகா மடம் செல்லலாம் என்ற எண்ணத்துடனிருந்த நீ, இவ்விதம் காதல் வாய்ப்பட்டது எங்கள் பாக்கியமே! உன் தந்தையார் இவ் விஷயத்தில் சம்மதமில்லாதவர் போல் தெரிகிறது. எனினும் உங்களிருவரையும் ஒருமிக்கச் செய்த எம்பெருமான் உங்களைக் கைவிடமாட்டார்" என்று ஆறுதல் கூறினாள்.

ஃ ஃ ஃ

பாக்கியவதி, பத்மாக்ஷியின் ஏக புத்திரி. அழகே அவதாரமானாற்போல் உருவெடுத்த அந் நங்கை கல்லூரியில் பயின்றுகொண்டிருந்தாள். கல்வியில் சரஸ்வதியும், அழகில் லட்சுமியையும், குணத்தில் அருந்ததியையும் ஒத்தவள். தன் தாயார் படும் கஷ்டத்தையும், பால்ய விதவைகள் படும் துயரத்தையும் கண்டது முதல் உலக வாழ்விற்குரிய மணத்தை வெறுத்து, கன்னிகா

மாடம் புகுந்து தன் ஆயுள் உள்ளவரை மனமில்லா மணத்தையும், கொழுத்தக் கிழவர்களின் பேராசையை ஒடுக்கவும் இளங் காதலர்களின் இனிமையைப் பெருக்கவும், பால்ய விதவைகளின் துயர்களைப் போக்கவும், தன் ஆயுளை அர்ப்பணம் செய்ய எண்ணங்கொண்டிருந்தாள். சகல ஜாதிகளுடன் பழகி மக்களுக்கு நன்மை செய்யத் தீர்மானித்தாள். ஆனால் அவள் தந்தையோ அவளை ஒரு கோடீஸ்வரனுக்கு மணம் செய்ய நிச்சயித்தார். அவனுக்கு இயற்கை அழகும் குணமும் கிடையாது. பாக்கியவதி அம்மணத்தை வெறுத்தாள். ஆனால் தினகரன் என்னும் வாலிபன் மீது காதல்கொண்டாள்.

ஃ ஃ ஃ

தினகரன், சன்சைட் (Sunside)டிலுள்ள தனது வீட்டுத் திண்ணையில் ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு புத்தகமொன்றை விரித்து வைத்துக்கொண்டு சிந்தனையிலிருந்தான். அவனுக்குப் பாக்கியவதியைப் பிரிந்ததிலிருந்து புத்தகத்தின்மேல் நாட்டம் செல்லவில்லை.

"ஆ பாக்கியம்! நீ என்ன நினைக்கின்றாயோ! நான் உன் தந்தையின் நட்பை விரும்பி எழுதிய கடிதத்தை நிராகரித்து திருப்பிவிட்டாரே. அவராகவே செய்தாரோ? அல்லது பாக்கியம் மாறிவிட்டாளோ! நான் அவளைக் கண்டபோதெல்லாம் என் மனது புளகாங்கித முற்றதே! அங்கிருந்தவரை, என் நாட்டமெல்லாம் அவள் பால் சென்றதே! அவளும் என்னையே விரும்புவள்போலத் தோன்றினாளே! அவள் என்னைக் காணும்போதெல்லாம் அவளது அதர மலர்கள் மலர்ந்து புன்முறுவல் செய்தனவே! நான் கடைசியில் அவளிடமிருந்து பிரியும்போது அவளுடைய கயல விழிகள் கமலம்போல் மலர்ந்து கண்ணீர் அருவியாயோட, அவள் மனம் என்மீது அருள் சுரக்கத் துடங்கினதே. ஈசா, இன்னும் உன் மனமிந்த ஏழைமீது இறங்கவில்லையா" என்று வருந்திக்கொண்டிருந்தான் தினகரன்.

ஃ ஃ ஃ

வாசுதேவர் வீட்டில் ஏகக் குழப்பமாய்க் கிடந்தது. பத்மாக்ஷி தன் கணவனிடம் பாக்கியவதியின் மனப்பான்மையை வெளிப்ப

டுத்தி தினகரனை வரவழைத்து ஏற்பாடுகள் செய்யும் படியும் கோடீசுவரனைத் தள்ளிவிடும்படிக்கும் கெஞ்சினாள். அவர் அவளை நோக்கி, "சிறுக்கி! உன் நடவடிக்கைகளையே உன் குழந்தைக்கும் கற்றுக்கொடுத்து விட்டாய். என்னிஷ்டப்படி அது நடப்பதா? முளைத்து மூன்றிலை காண்பதற்குள் தன்னிஷ்டம் போல் நடப்பதா? அந்தப்பயல் தினகரன் உங்கள் யாவரையும் மயக்கிவிட்டான். நான் நினைத்தபடி கலியாணமும் முடிந்தவுடன் அவனை மான நஷ்டத்திற்கு இழுக்கப் போகிறேன் பார்" என்று வாயில் வந்தபடியெல்லாம் பேசினார். அது சமயம் அவ்வறைப் பக்கம் வந்த பாக்கியவதி தன் தாயாரின் கோலத்தைக் கண்டாள். இது காறும் தந்தையைக் கண்டு நடுங்கிய மனம் கல்லானது.

"அம்மா நீங்கள் எனக்காக வருந்தவேண்டாம். எனக்கு கோடீசுவரனும் வேண்டியதில்லை; தினகரனும் வேண்டியதில்லை. நான் இனி சீர்திருத்தக்காரர்களுடன் சேர்ந்து தேசசேவை செய்யப்போகின்றேன்" என்று சொல்லி வெளிக்கிளம்பினாள்.

உடனே அவள் தந்தை வாசுதேவர் அவளைப்பிடித்து "உனக்கு இவ்வளவு தைரியமா!" என்று கூறி ஓர் அறையில் அடைத்து, தர்மாம்பாளை மட்டும் அவளுடன் இருக்கும்படி ஏற்பாடு செய்து விட்டார்.

பிள்ளையைப் பெற்றும் அவர்கள் சுகதுக்கங்களைக் கவனியாத பெற்றோர்கள் எத்தனைபேர்? தாய் தந்தையாரையும் விட்டு, கணவனே சரணாகதி யென்று வந்த தம் மனைவியர்களை சந்தேகித்தும் பலவிதமாய்த் துன்புறுத்தியும் அவர்கள் வாழ்நாளைக் கண்ணீரும் கம்பலையுமாக்கி நரகவேதனை அனுபவிக்கச் செய்யும் பைசாசங்கள் எத்தனை? அந்தோ! பணப்பித்தாலும், புத்திமட்டாலும் தங்கள் பாவையர்களைப் பாழாக்கும் பாதகர்கள் எத்தனை?

ஃ ஃ ஃ

பாக்கியவதி நாளுக்கு நாள் மெலிந்து வந்தாள். அவளை கவனித்துவந்த டாக்டர் அவள்பிழைப்பது துர்லபம் என்றார். பாக்கியவதி நாள் முழுவதும் "தினகரா" வென்றே பிதற்றிக் கொண்டிருந்தாள். கடைசியாக டாக்டர் அவளுக்கு இஷ்டப்பட்டவர்

களையெல்லாம் அனுமதிக்கும்படியும், ஒருவேளை தினகரன் வந்தால் ஏதாவது அவள் விஷயத்தில் நம்பிக்கை ஏற்படலாம், என்றும் கூறினர். வாசுதேவரின் பிடிவாத நெஞ்சம் மாறியது. தன் ஏக புத்திரியை, மானிடர் மெச்சும் சௌபாக்கியவதியை, வண்டுகள் மொய்க்கும் வெண்மலரைக் கொன்ற பழி தன்மேல் வருமே என்ற பீதி உண்டாகியது. உடனே தந்தியாபீசுக்கு சென்று தினகரனைப் புறப்பட்டு வரும்படி தந்தி கொடுத்தார்.

தினகரன் கால் பந்து போட்டியில் ஜெயித்து ஆனந்தமாய் வீட்டில் வந்து உட்கார்ந்தான். உடனே தன் இன்ப பாக்கியவதியின் ஞாபகம் வந்தது. அதற்குள் "டெலிகிராம் மெஸ்ஸஞ்சர்" ஒரு தந்தியை தினகரிடம் நீட்டினன். தினகரன் அதை வெகு ஆவலாயும் ஆத்திரமாயும் உடைத்து வாசித்தான்.

"பாக்கியவதி சாகும் தருவாய். டாக்டர்கள் கைவிட்டனர் அவசியம் பார்க்க விரும்புகிருள். இரவு புறப்படவும். ஸ்டேனில் கார் காத்திருக்கும்—வாசுதேவன்"

உடனே பித்தன்போல் தினகரன் இங்குமங்கும் ஓடினன். "ஆ! பாக்கியம் என்னை ஏமாற்றிவிட்டாயே! மண பந்தத் துகிலோடு உன்னை மணக்க யான் எண்ணமிட்டேனே! என் எண்ணம் மண்ணுயிற்றே" என்று புலம்பினன். கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஒன்பதாகியது. உடனே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டான். இரண்டாவது வகுப்பு "டிக்கெட்" ஒன்று பெற்றுக் கொண்டு ரயிலில் ஏறினன். இரவெல்லாம் துக்கத்தால் தூக்கம் பிடிக்கவில்லை. காலேவண்டி "விக்டோரியா" ஸ்டேஷனையடைந்ததும், அவ்விடம் வெளியே அவனுக்காக காத்துக்கொண்டிருந்த காரில் ஏறி, வாசுதேவரின் பங்களாவை அடைந்தான். அவன் வரவை எதிர்பார்த்திருந்த வாசுதேவரும், பத்மாக்ஷியும் அவனை எதிர்கொண்டழைத்தனர்.

"பாக்கியவதி எப்படி இருக்கிருள்? மாமா, நான் பார்க்கலாமா?" என்று பதறிக்கொண்டே பாக்கியவதி படுத்திருந்த அறையுள் நுழைந்தான் தினகரன். அவன் வரவைக்கண்ட பாக்ய

வதி "ஆ! இப்பொழுதுதான் உங்கள் மனம் இறங்கியதோ" என்று சொல்லி தன் படுக்கைமீது அதுவரை இல்லாத ஓர் வலுவுடனும், பிரகாசத்துடனும் எழுந்து உட்கார்ந்தாள்.

பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? தினகரன் அவளைத் தாங்கிக்கொண்டு, கட்டிலின்மீது படுக்கவைத்து அண்டையிலிருந்து உபசரணை செய்ய ஆரம்பித்து விட்டான். சில நாட்களுக்குப்பின் டாக்டரும் இனி பயமில்லை என்று சொல்லிவிட்டார். சில மாதங்கள் கடந்தன. பாக்கியவதி பூரண சுகமடைந்தாள்.

பாக்கியவதிக்கும் தினகரனுக்கும் ஓர் நன்னாளில் விவாகம் நிறைவேறியது. பாக்கியவதியும், தினகரனும் உல்லாசமாய்ப் பேசிக்கொண்டு தோட்டத்தில் உலாவிக்கொண்டிருக்கின்றனர். அதைக்கண்டு, கடவுள் தனக்குச் செய்து உதவியையும் நலத்தையும் எண்ணி, களித்து நிற்கின்றாள் பத்மாக்ஷி.

பாக்கியவதிக்கு விவாகமான ஆறும் மாதம் வாசுதேவர் இறந்துவிட்டார். பத்மாக்ஷியும் தர்மாம்பாளும் "மாதர் மறுமண சகாய சங்கத்"தில் சேர்ந்து, சீர்திருத்த வேலைகள் செய்துகொண்டு சுகமாய் வாழ்ந்து வருகிறார்கள்.

---

# மாதவன்

(குன்றை மு. பெத்தய்யா)

அண்ணாமலைப் பிள்ளைக்கு சுமார் 55 வயதிருக்கும். கொஞ்சம் வைதீகப் பேர்வழி. அவருக்கு இரண்டு குழந்தைகள் உண்டு. சுப்பையாதான் மூத்தவன். இளையவள் வஸந்தா. இருவரும் ஹைஸ்கூலில் வாசித்து வந்தார்கள்.

அண்ணாமலை பிள்ளைக்கு ஓர் ஆவல். அதாவது, தான் உயிருடன் இருக்கும் போதே சுப்பையாவுக்குக் கல்யாணம் செய்து வைத்து ஏதாவது நிறையப் பணம் வைத்து விட்டுப் போக வேண்டுமென்பதுதான்.

வஸந்தா படிப்பை நிறுத்திக்கொண்டாள். கொஞ்சம் படித்திருந்ததின் மூலம் பத்திரிகைகளைப் பார்த்துத் தன் அறிவை வளர்த்து வந்தாள். சுப்பையா மட்டும் காலேஜில் வாசித்து வந்தான்.

நாட்கள், மாதங்கள், வருஷங்கள், எல்லாம் வெகு விரைவாக ஓடிக்கொண்டிருந்தன. வஸந்தாவும் காலத்தில் பருவமடைந்தாள்.

சுப்பய்யா கொஞ்சம் சீர்திருத்தவாதி, சில சமயங்களில் மேடைமீதேறிக் கூடப் பேசியிருக்கிறான். ஆனால், மாதர் மறுமணம், தீண்டாமை, முதலியவைகளைப்பற்றிப் பேசும் போது அண்ணாமலை பிள்ளைக்கு கோபம் கோபமாக வரும். சுப்பய்யா வீட்டிற்கு வந்தவுடன் புத்தி புகட்டுவதில் முனைந்து விடுவார்.

"ஏனப்பா, நம் சகோதரிகள் நம் தாய்மார்கள் விதவைகளாக இருந்தால் அதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? யாராவது விதவைகள் வீதி வழியே போய்க்கொண்டிருந்தால் அட அறுதலி முண்டை எதிரே வருகிறடா, வாடா வீட்டிற்குப் போய் விட்டுத் திரும்புவோம்; என்று பிதற்றுகிறார்கள். ஒரு தகப்பனே, தாயோ தன் மகளுக்குப் புருஷன் இறந்து விட்டால் அவள் உடுத்தியிருக்கும், நல்ல சேலை, நகைகள், யாவற்றையும் பறித்துக் கொண்டு, அடுப்பங்கரையிலுள்ள வேலைகளை அவள் மீது சுமத்தி விட்டு தான் ஜம்பமாய் இருந்து விடுகிறார்கள். கொஞ்சமேனும் தான் பெற்ற பிள்ளை என்ற கருணை தாயிடத்திலோ, தகப்பனிடத்திலோ இருப்பதில்லை. தன் மகனுக்கு மனைவி இறந்து விட்டால் அடுத்த மாதமே கல்யாணம் செய்வதற்கு ஆயத்தம் பண்ணி விடுகிறார்கள். பெண்களுக்கு மட்டும் ஏன் அப்படிச் செய்யக்கூடாது? பெண்களும் ஆண்களைப் போன்றுதானே பிறந்தார்கள். ஒரு கண்ணில் வெண்ணையும், ஒரு கண்ணில் சுண்ணாம்பும் வைக்கிறார்கள் அந்த சண்டாளப் பெற்றோர்கள். இப்படிச் செய்யும் மனிதர்கள் இருக்கும் வரை நம் நாடு முன்னேற்றம் அடைவது முடியாத காரியம். சிலபேர்கள் அதோ வருகிறான் பறையன். "டேலே, அந்தண்டை போடா, பறப்பயலுக்கு என்ன ஊக்கம் பாரு. நடுத்தெருவிலே வருகிறான் என்று" கூச்சல் போடுகிறார்கள். ஏன்? அவர்களுக்குக் கண்ணில்லையா? கையில்லையா?

காலில்லையா? நாடி நரம்பில்லையா? நம்மைப் போன்று அவர்கள் தாய் வயிற்றில் பத்துமாதம் இருந்து வரவில்லையா? அட கடவுளே இதற்கு எப்பொழுது தான் விமோசனம் பிறக்குமோ!" என்று ஒரு நீண்ட பிரசங்கம் செய்வான்.

"ஆமாண்டா, காங்கிரசு, காங்கிரசுன்னு நீங்களெல்லாம் ரெம்ப கெட்டுப்போயிட்டிய" என்று ஒரே வரியில் தன் வம்பர் மகாசபையின் அபிப்பிராயத்தைக் கூறி முடித்து விடுவார் தந்தை.

இப்படியும் அறியாமையால் சூழப்பட்ட மனிதர் இன்னும். அதுவும், என் வீட்டில் என் தகப்பனாக, இருக்கிற தென்றால் என்னுடைய போக்கென்ன. இவருடைய சித்தாந்தமென்ன, எவ்வளவோ வித்தியாசமாக இருக்கிறதே, என்று அடிக்கடி துக்கப்படுவான் சுப்பையா.

* * *

அண்ணாமலைப் பிள்ளையின் பெரு முயற்சியால்சுப்பய்யாவுக்கு, சென்னையில் ஒரு பாங்கில் டைப்ரைட்டர் வேலை கிடைத்தது. வேலையைப் பார்த்து வந்தான்.

வஸந்தாவைப் பலர், நான் நீ என்று கேட்டுக்கொண்டிருந் தார்கள். ஆனால், அண்ணாமலைப் பிள்ளை பணத்தின் மேல் குறியா யிருந்ததால் எல்லாவற்றையும் தட்டிவிட்டார். அவரது நண்பர், முத்தய்யா பிள்ளை என்பவருக்கு வயது சுமார் 65 இருக்கலாம். முன் இரண்டு கல்யாணம் பண்ணியும் குழந்தையில்லாததால், வஸந்தாவை, மூன்றாந்தாரமாகக் கேட்டார். அதற்காக அண்ணா மலை பிள்ளைக்கு ஆறுயிர ரூபாய் தருவதாயும் சொன்னார்.

பணமென்றால் பிணமும் வாய் திறக்கும் அல்லவா? சரி என்று ஒப்புக்கொண்டு முகூர்த்த நாளும் வைக்கப்பெற்றது.

சுப்பய்யாவுக்குத் தகவல் தெரிந்தால் ஏதாவது இடையூறு வருமென்றெண்ணி அவனுக்குத் தெரியாமலே கல்யாணத்தை நட த்திவிடுவதற்குத் தீவிரமாக வேலை செய்து வந்தார். முகூர்த்த நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது. வஸந்தாவும் பிடிவாதமாக வே "முடியாது" என்று சொல்லி வந்தாள். "கரைப்பவர் கரைத் தால் கல்லுங் கரையு"மென்றபடி ஒருவாறாக ஒத்துக்கொண்டாள்.

வஸந்தாவும் இளம் பெண்தானே! கல்யாணமும் தடபுடலாக முடிந்துவிட்டது.

ஆனல் துரதிஷ்ட்ட வசமாக கல்யாணம் நடந்த மூன்ரும் மாதம் முத்தய்யா பிள்ளை விண்ணுலகேகினர்.

ஃ ஃ ஃ

பதினறு நாட்களாயின. வஸந்தாவின் மாங்கல்யம், நல்ல சேலை, நகைகள், யாவற்றும் பறிமுதல் செய்யப்பட்டு மூலையில் ஒதுக்கப்பட்டாள். புண்ணியவதி வீட்டிற்கு வந்தாள் கூடவே நமனைக் கூட்டிக்கொண்டு வந்து விட்டாள், அறுதலி முண்டே என்ற சக்களத்திகளின் கூச்சலும் அதிக மாயிற்று.

இரண்டு மாதங்கள் கஷ்டத்துடன் ஓடின. அப்புறம் தாயார் வீட்டிற்கு வந்துவிட்டாள். தாயார் வீட்டிற்கு வந்தவுடன் முன்னை விட அதிகக் கஷ்டங்களுக் குட்பட்டாள்.

வெளியே போய் நிற்கக்கூடாது. புஸ்தகத்தைக் கையில் எடுக்கக்கூடாது. இது தாயாரின் கடுமையான உத்தரவு. ஏதோ சகித்துக்கொண்டு வீட்டு வேலைகளைக் கவனித்து வந்தாள். அடுத்த ஊரில் ஓர் கும்பாபிஷேகம். அதற்காக, அண்ணாமலை பிள்ளை தன் சகதர்மிணியுடன் புறப்பட்டு விட்டார். வீட்டில், வஸந்தா மட்டுந்தான். அப்பொழுது ஒரு சேவகன் ஒரு கவரைக்கொடுத்து விட்டுப் போனன். அந்தக்கவரைப் பார்த்ததும் அதில், தன் பெயர் போட்டிருப்பதைக் கவனித்ததும் அதை ஆவலுடன் பிரித்து வாசித்தாள்.

வஸந்தா!

உன் நிலைமையைப் பார்க்க எனக்கு சகிக்கமுடியவில்லை உனக்கு கல்யாணம் நடந்ததும், உன் கணவன் இறந்ததும். நீ வீட்டில் அல்லல் படுவதையும் நினைக்க நினைக்க என் மனம் சகிக்கவில்லை எல்லாம் விதியின் விளையாட்டு. நீ மறுமணம் செய்து கொள்ள விரும்பினல் இக்கடிதம் கிடைத்த மறு நாள் காலை நம்மூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்துவிடு, நான் அங்கு நிற்கிறேன். எனக்கு வீட்டிற்கு வரப் பிடித்தமேயில்லை. நீ என்னுடன் வந்தால் என் நண்பன் ஒருவனுக்கு சென்னையில் கலியாணத்தை

நடத்தி வைக்கிறேன். குறிப்பிட்ட நேரம் தவறினால் மறுபடியும் நான் சென்னைக்குப் புறப்பட்டுவிடுவேன். மற்ற விஷயம் நேரில்.

இப்படிக்கு,

உன்வரவை எதிர்பார்த்து நிற்கும் சுப்பய்யா.

இதை வாசித்த வஸந்தாவுக்கு ஒரு கணம் திகைப்பை உண்டு பண்ணியது. தன் அண்ணனின் முடிவுப்படியே நடப்பதென்று தீர்மானித்து ரகசியமாக புறப்படுவதற்கு ஆயத்தமானாள். மறுநாள் பொழுது புலர்ந்தது. தன் பயண மூட்டையுடன் ரயில் வே ஸ்டேஷனை நோக்கி வஸந்தா வெகு விரைவுடன் போய்க் கொண்டிருந்தாள். அப்பொழுது நேரே சென்னைக்குப் புறப்படும் ரயில் ஒன்று தயாராக நின்றது. சுப்பையா வஸந்தாவைப் பார்த்ததும் சந்தோஷத்துடன் வஸந்தா என்றான். அண்ணா என்றாள் வஸந்தா. அவளது கண்களில் நீர் துளித்தது. இருவரும் வேகமாக ரயிலில் ஏறினார்கள். சிறிது நேரஞ் சென்று ரயிலும் புறப்பட்டது. வஸந்தா தன் கண்ணுக்கு மறையும்வரை தன் ஊரை வெறுப்புடன் பார்த்துக்கொண்டே சென்றாள்.

சென்னை சென்று இரண்டு மாதங்களாயின. ஒரு சுபதினத்தில், பழணியப்பனுக்கும் சுப்பய்யாவின் தங்கை வஸந்தாவிற்கும் கல்யாணம் இனிதே நடந்தேறியது. தம்பதிகள் தேச சேவையில் ஈடுபட்டார்கள். இப்பொழுது அவர்களை மகிழ்விக்க ஓர் ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. அவனுக்கு, மாதவன் என்று பெயரிட்டிருக்கிறார்கள். மறுமணத்தால் உதித்த மாதவன் வாழ்க.

---

# விஜய லக்ஷ்மி அல்லது :: :: :: :: விதவையின் விடுதலை

## காதலும் கலக்கமும்

(எட்டயாபுரம் S. சுப்பையா பிள்ளை)

அன்புப்பெருக்கே! ஆசைக்கடலே! இன்பத்தேனே! ஈடில்லாத் தெள்ளமுதே! உத்தமப் பெண்ணரசே! ஊர்வசி நிகர்த்தோய்! எந்தன் காதலி! ஏந்திழை மாதரசே! இன்னும் என்னென்று கூறப்போகிறேன், என் அன்புப் பெருக்கை உன்னி

டத்தில்! கண்மணி! உனக்கு இக்கடிதம் எழுதத் தொடங்கும்பொழுது, நீ சொன்ன சில வார்த்கைள் என் ஞாபகத்திற்கு வருகின்றன.

"காதலா உங்கள் விருப்பத்தையும், என் ஆவலையம், இன்றைய சமுதாயம் ஒப்புக்கொள்ளத் தயாரில்லை, எனவே என்னை மறந்து விடுங்கள்" என்ருய் நீ. சாவித்திரி, சந்திரமதி, சீதை, தமயந்தி முதலிய அரசகுமாரிகள், தங்களுக்கேற்ற நாயகனை, "சுயம்வரம்" மூலம் பெற உரிமை பெற்றிருந்த நாட்டிலே, "அரசனெவ்வழி குடிகளவ்வழி" என்றபடி மற்றவர்களும் அம்முறைகளைக் கையாண்டு வந்த நாட்டிலே நீ உனக்கேற்ற நாதனைத் தெரிந்தெடுக்க உனக்கு உரிமையில்லையா? "விதவை" என்ற பட்டம் அதற்கு முட்டுக்கட்டையா? பகுத்தறிவற்ற உன் குழந்தைப் பருவத்தில் புருஷன் என்ருல் யார்? அவனுக்கு மனைவி செய்யவேண்டிய கடமை என்ன என்பதை உணர்ந்து கொள்ள முடியாத அவ்வளவு பால்யத்தில் தாய், தந்தை, பாட்டன், பாட்டி முதலியோர் கண்டு களிப்பதற்காக நடத்தப்பட்ட, பொம்மைக் கலியாணத்திலே, அவர்களின் கைக் கருவியாக இருந்து வந்த உன்னை அவர்கள் ஆவலைப்பூர்த்தி செய்தஉன்னைத் தாலிகட்டத் தெரியாமல், உன் தோளின் மேல் கை வைத்துக் கொண்டிருந்த உனக்குப் புருஷனென்று சொல்லப்பட்ட சிறுவனை, அவன் கை மேலே படுவதால் உண்டான வேதனையால் கோபங்கொண்ட நீ, அவன் கன்னத்திலடிக்க, வீரென்று அழுது "என்னை அடிக்கிருள்" என்று எழுந்தோடிய சிறுவனை தடுத்து உன்னை சமாதானப்படுத்திய பெரியவர்களின், அறியாமைக்கிரங்குவதா? ஊரில் தோன்றிய விஷக்காச்சலில் தானும் கலந்து மடிந்த சிறுவனை நினைந்தழுவதா! அறியாச் சிறு வயதில் உயிர் துறந்த, 'புருஷன்' என்று ஊரார் சொல்லிக் கொண்ட ஒருவனுக்காக உன் வாழ்நாள் முழுவதும், வீண் நாளாக்க வேண்டுமென்று கட்டளையிடும் சமுதாயத்க் கண்டஞ்சுவதா! என்பதை நிச்சயம் செய்யும் பொறுப்பை உனக்கே விட்டுவிடுகிறேன். கவலை யொழி, கண்ணே விழி. "சட்டங்கள் செய்வதும், பட்டங்களாள்வதும், பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்" என்று வீரகர்ஜனையிடும் சுப்ரமண்ய பாரதி பிறந்த நாட்டிலே, தோன்றிய நீ இந்த அற்பமான,

சாதிக்கட்டு, சமயக்கட்டு, சாத்திரக்கட்டு, மூடநம்பிக்கை, வைதீகக் கும்பலில் சூழ்ச்சி முதலியவற்றில் சிக்க ஆசைப்படுகிறாயோ அதை உதைத்தெரிய ஆவல் கொள்ளுகிறாயா கண்ணே!

வேண்டாம் வீணான இந்தச் சர்ச்சைகளை யொழித்து உன் வாளுளுக்கேற்ற வரனைநாடி, காணாத கற்பனைச் சாத்திரங்களை கடைகெட்டதென்று களைந்தெறிந்து "ஆணுக்கிங்கே பெண்கள் இளைத்தவரில்லையென்று கும்மியடி" என்ற வீரநாதத்தைச் செவியுட்கொண்டு நடக்க முற்படு, புன்மையழிப்பாய், நன்மையளிப்பாய்.

இப்படிக்கு,
உன் அன்பன்.

"ஹா! அன்பரே! என்ன அழகான உதாரணங்கள், எவ்வளவு மனோதைரிய மளிக்கும் வசனங்கள். உங்கள் கடிதம் என்னை பரவசப்படுத்துகிறது! ஆனால், ஆனால், ஹே! பாழும் இந்து சமுதாயமே! வைதீக சோதரரே! நீங்கள் எல்லாம் என்னைப் புறக்கணிக்கிறீர்கள்; ஏசுகிறீர்கள். ஏறெடுத்துப் பார்க்கக் கூசுகிறீர்கள். கொஞ்சம் மீற விரும்பினால் நெருப்புத் தணலொத்த வார்த்தைகளை வீசுகிறீர்கள். உங்கள் முன்னால், ஆடிக்காற்றி லகப்பட்ட இலவம் பஞ்சென அல்லற்படும், என்போன்ற கோடிக் கணக்கான சகோதரிகளுக்கு விமோசனமில்லையா? "விமோசனம்" என்ற வார்த்தையைக் கேட்டவுடன், "விதவைக்கா? விமோசனமா?" என்று அதற்கு விமர்சனம் எழுத முன்வரும் வீரர்களே! அவர்களைப் பின்பற்றும் வைதீகப் பிச்சுகளே! கொஞ்சம் நெஞ்சில் கைவைத்து யோசியுங்கள். ஆண்களாகிய உங்களுக்குமட்டும், ஒரு மனைவி இறந்துவிட்டால் மறு மனைவி கட்டிக்கொள்ளலாம். உங்கள் இயற்கையுணர்ச்சியை நிறைவேற்ற வேறு பல கேடுற்ற முறைகளையும் கையாளலாம். என்ற உரிமையிருக்குமானால், எம்போன்ற பெண்கள், மறுமணம் செய்துகொள்ளுவதற்குமட்டும், உள்ள நியாயமான உரிமையையாவது கொடுக்ககூடாதா? தேவ சிருஷ்டியில் மக்களெல்லோருக்கு முள்ள காதல், எங்களுக்குமட்டும் மக்கி மண்ணோடு மண்ணாய் விட்டதென்பது உங்கள் எண்ணமா? இயற்கை அப்படியுமிருக்குமென்றால், புருஷர்களுக்குமட்டும் அது விதி விலக்கா? ஆணுக்கொரு நீதி, பெண்

ணுக்கொரு நீதி வழங்கும் எந்தப் புத்தகத்தையும், சுட்டெரிப்பது தப்பிதமாகுமா? இன்றைய சரோஜினியின் கலப்பு மணத்தால் இந்துமதம் அழிந்துவிட்டதா? லக்ஷ்மீ தேவதாசின் கலப்பு காதல் மணத்தால் சமூகம் நசித்துவிட்டதா? இன்னும் எத்தனையோ வீராங்கனைகள், மணம் நிகழ்த்திக்கொண்டிருப்பதும், இருந்ததும், நீங்கள் அறியாததா? பின் ஏன் என்னைமட்டும் இத்தகைய கொடிய இம்சைக் காளாக்கவேண்டும்? நாங்கள் உங்களுக்குச் செய்த தவறென்ன? இதற்கு ஏன் விதியைப் பிணைக்கிறீர்கள்? இது விதியின் செயலானால், இன்னொரு புருஷனை மணக்க விரும்புவதும் விதியின் செயலென்று ஏன் நீங்கள் சும்மா இருக்கக்கூடாது? அதற்குமட்டும், ஜாதி ப்ரஷ்டம், சமூகக் கட்டுப்பாடு, தாண்டவமாடுவதேன்? விளையாட்டுப் பிள்ளையின் தாலாட்டுக் கல்யாணத்தில் விளையாட்டுப்பிள்ளை தவறிவிட்டால், தாலாட்டுப் பெண் தன் வாழ்நாள் முழுதும் விதியை நொந்தழுவதை வியாஜமாய் கொள்ளவேண்டுமா?

அட கண்ணற்ற சமூகமே! பெண்ணுக்குப் பிழை தேடி, எண்ணற்ற பாபத்தை, இன்னும் சுமக்கவா விரும்புகிறாய்? நன்றாய் யோசி. ஆணுக் கொரு நீதி, பெண்ணுக் கொரு நீதி கற்பிக்கும் உன் கடுஞ்செயல் பர மண்டலத்திலும், மன்னிக்கப்பட மாட்டா தென்பதை யுணர். இது நீதியல்ல, முறையு மல்ல, ஆண்மையல்ல, அழகுமல்ல, நேர்மையல்ல, நெறியுமல்ல. 'பெண்ணென்று சொன்னால் பேயு மிரங்கு மென்பார்கள்" உன் எண்ணம் இரங்கவில்லை. இந்த மனது கல்லால் ஆக்கப்பட்டதா? இல்லை ஏனென்றால் அதுவும் அடிமே லடி யடித்தால் உடையவாவது செய்யும். இது அதுவும் இல்லை. பின் இரும்பா? இல்லை-அதையும் உருக்கி நினைத்தபடி வார்த்து விடலாம். பின் எதைத் தான் உபமானம் சொல்வது? உபமானம் சொல்வதற்குப் பொருளற்ற வைதீக எண்ணமே! வானர ஆதிக்கமே! ஒழி ஒழி. உன் ஆணவம் அழியட்டும்! அட்டூழியம் ஒழியட்டும், உன் அசட்டுத் தனம் முடியட்டும், ஆகாசக்கோட்டை இடியட்டும், புத்துணர்ச்சி பெருகட்டும், சித்தானந்தம் நிறையட்டும், வாழ்க மறுமணம் வையத்துக் கலப்பு மணம்.

நேசரே! கடைசியாகத் தங்கள், ஞாபகம் வந்தது. இந்த வைதீகக் கொட்டைக்குச் சமாதி கட்டியே தீருவேன். அதில் உயிர் துறந்தாலும் கடமையைச் செய்தே னென்று மனம் ஆறு வேன். ஆனால், மறைந்து வெளிச்செல்லும், மடமைக்கு ஒரு நாளும் மனம் ஒப்பேன்." எனத் தனக்குள் கூறினவளாய், அழகே உருவெடுத்த ஓராரணங்கு, "செல்வபுரி" நகரின் மேற்கே யுள்ள "சீமந்த விலாஸ்" என்ற பங்களாவின், பின் புற நந்தவனத் திலுள்ளதோர், பளிங்குக்கல் மேடையிலே, தனது இடது கையால் தலையைத் தாங்கியவண்ணம் சாய்ந்து படுத்திருந்தாள். செல்வபுரியிலேயே நிகரற்ற சீமான், சீமந்த முதலியாரின் ஒரே புதல்வியும், நமது கதாநாயகியுமான "லெக்ஷ்மீதேவியை" வைதவ் யம்" என்ற சமூக நோய் வாட்டுகின்றது. ஆறுதல் கூற நாதி யின்றி, தேறுதல் கூற நீதியின்றி திகைத்து மனம் வாடுகின்றாள் தேன் மொழியாள். இந் நிலையில், அவள் எவ்வளவு நேரம் இருந்தாளோ, நாமறியோம். திடீரென்று அவள் கையில் வைத் திருந்த கடிதம் அவளுக்குப் பின்னால் நின்ற யாரோ ஒருவரால் பிடுங்கப்பட்டது. உடனே துள்ளி எழுந்தாள் மானனையாள். திரும் பிப் பார்த்தாள். தன்னைக் கோபத் தணல்வீசும், இரண்டு கூர்மை யான கண்கள் மிக்க வெறுப்புடன் மிரட்டிப் பார்ப்பதைக் கண் டாள். திடுக்கிட்டாள். மெய்சிலிர்த்தாள், ஏதோ பேசவாயெடுத் தாள். வாய் குழறிற்று, கை நடுங்கிற்று, கண் நீரை அருவிபோல் கொட்டிற்று, "பயம்" என்னும் கொடும்பேய் வசப்பட்டாள்; மெய் மறந்தாள்.

## கடமையும்—காதலும்

நமது கதாநாயகன் விஜயன் தன் வீட்டு மாடிமீதமர்ந்து பின்வருமாறு பேசிக்கொண்டிருந்தான்.

"ஹா! தந்தையே! என்னிஷ்டப்படி ஒரு மங்கையை மணந்துகொள்ள எனக்கு உரிமையில்லையா? உங்கள் நோக்கம் போல பழைய வைதீகத்திலே நானும் ஆழ்ந்துபோக வேண்டுமா? நாட்டுக்கு சுதந்திரம்வேண்டுகின்ற இந்தக் காலத்திலே, வீட்டில் சுதந்திரம் இல்லையா? விடுதலை என்பது தேச விடுதலைமட்டுந்தானா? சமூக விடுதலை, சாத்திர விடுதலை, மூடப் பழக்க வழக்க விடுதலை,

ஆகிய எல்லாமில்லையா? கண்டிப்பாக அப்படிச் செய்யமுடியா தென்றால், அவரது பூஸ்திதியில் எனக்கு எந்தவித உரிமையுமின்றி நான் அனாதையாகப பரதவிக்கவேண்டுமாமே? அட கடவுளே! பி. ஏ.,வரைப் படித்திருக்கும் எனக்கு ஒரு வேலையாவது கிடைக் கக்கூடாதா?" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது ஒரு கிழவி அங்கு வந்து அவன் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றாள். உடனே நமது இளவள் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

"நேசரே! தங்கள் கடிதம் கண்ணுற்றேன். பல அசந்தர்ப்பங் களால் உடனே பதில் எழுதமுடியவில்லை. தாங்கள் சொல்லுகிற படி சமூகக் கட்டுப்பாட்டை உடைத்தெறிய நான் தயார். ஆனால் ஓடி ஒளிந்து மறைந்து மணமுடிக்க நான் விரும்பவில்லை. பகிரங்க மாக என் தந்தையிடம் சொல்லி நம் விருப்பத்தை நிறைவேற்ற முயல்கிறேன். முடியாவிட்டால் அதுகாரணமாக உயிர்விடு கிறேன். இது நான் எனது முடிவு. தங்கள் தந்தை என்ன சொல்லு கிறார்? இதில் தங்களுடைய முடிவு என்ன? நீங்கள் எழுதிய கடிதம் என் தந்தை கையில் சிக்கிவிட்டது. அவர்கள் அடைந்த ஆத்திரத்திற்களவே இல்லை. என்னை எவ்வளவு நயத்திலும் பயத்தி லும் கேட்டுப்பார்த்தார். பாச்சாப் பலிக்கவில்லை. எனவே, என் வீட்டிலேயே என்னை ஒரு அறையில் போட்டு அடைத்து பல மான காவல் வைத்திருக்கிறார். காதல் எத்தகைய சக்தி வாய்ந்தது என்பதை அவர் அறியார்போலும்! காவல் கட்டுகளும் கோட்டை சுவர்களும், இரும்புக் கதவுகளும், இம்சிக்கும் பீரங்கிகளும் சித்ர வதை செய்யும் வேறு எத்தனையோ ஆயுதங்களும் அதற்கு ஆதார மான பணமும் அவர்கள் கையாளும், "காதல்" என்ற தீயின் முன் வெந்து பிடிசாம்பலாகும் என்பது என் தந்தை அறிவுக்கெட் டாதது வியப்பே. தங்கள் பதில்காண ஆவல் என்னைக் கேட்டால் நீங்கள் ஒரு டாக்டர் வேஷத்தில் நோயுற்று வாடும் என்னைக் காண வந்தால் விளைவை பின்னாலறிவோம்." தங்கள் காதலி.

"இதோ புறப்பட்டுவிட்டேன். துன்பம் தொடர்கிறது. அன்பு அழைக்கிறது. அதில் இன்பம் பிறக்கிறது. காதலுங் கடமையும்

உந்த கண்மணியைக் காணப்போகிறேன். கடவுளே நீதான் கதி" என்று புறப்பட்டான் விஜயன்.

## விபரீத விளைவும்—விஜயலட்சுமி முடிவும்

டாக்டரை அழைத்து வரச் சென்ற வேலைக்காரன் வரவை எதிர்நோக்கி இருக்கும் சீமந்த முதலியார் பின்வருமாறு தனக்குள் பேச ஆரம்பித்தார்:

"ஆம், தாயற்ற குழந்தை லட்சுமி, நோயுற்று வாடுகின்றாள். அவளை ஆதரிக்க இன்றுள்ள நிலையில் என்னைத் தவிர வேறு நாதியில்லை. தன் புருஷன் வீட்டில் சுகமாய் வாழவேண்டிய இந்த பால்ய வயதிலே, புருஷன் பராமரிப்புக் குட்படவேண்டிய காலத்திலே மாமன் மாமியாரை மகிழ்விக்கும் வயதிலே தந்தைக்கு மனத் துயருண்டுபண்ணும், பரிதாபத்திற்குரிய குழந்தையானதும் அவள் செய்த பாபமே. "வைதவ்யம்" ஆண்டவனால் அன்றெழுதப்பட்ட எழுத்து, அதை நம்மால் தடுக்கமுடியாது. அதற்காக வருந்துவதில் பலனுமில்லை. இனி அவளை எப்படி நடத்தவேண்டுமென்பதே நான் செய்யவேண்டிய வேலை. இவ்விஷயத்தில், முன்னோர் கூற்றுக்கு ஒத்தே நாம் நடக்கவேண்டும். இதைத் தவிர நம்மால் என்ன செய்யமுடியும்? எல்லாம் ஈசன் திருவிளையாடல், அவனன்றி அணுவும் அசையாது. இவள் மட்டும் இதற்கு விலக்கா? இல்லை. ஆனால், சமூகக் கட்டுப்பாட்டுக்கு ஒத்து வாழ்ந்து, எனக்கு பெருமைதரும் வழியைக் கைப்பற்ற இவள் மறுக்கிறாள்" என்று கூறி கோப மேலிட்டால் பல்லை நெறு, நெறுவென்று கடித்துக்கொண்டு:

"லட்சுமீ! நீ விதிக்கு விலக்காக ஏதோ சாதித்துவிடலாமென்றெண்ணுகிறாய்! குலப்பெருமையைப் பாழ்படுத்த விரும்புகிறாய்! சமூக உத்திரவை புறக்கணிக்கிறாய்! சாத்திரத்தை அவமதிக்கிறாய். சாதிப் பெரியோரை நிந்திக்கிறாய்! "விநாசகாலே விபரீத புத்தி" என்றபடி உனது விநாசகாலம்தான் உனக்கு இத்தகைய அறிவை அளித்திருக்கவேண்டும். வேண்டாம். வேண்டாம். என் கோபத்தைத் தூண்டாதே அரிய பொன்மொழிகளை அழிக்க முற்படாதே. பலனளிப்பதில் முயற்சி செய். வெறும் பேச்சு

வேதாந்தத்தால் விதியை அழிக்கமுடியாது. இது அறிவுடைய அரிவையர்க்கழகல்லஇதைஉய்த்துணரும் நாளே,உனக்குநல்லநாள் விமோசன நாள் விடுதலை நாள்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது வேலைக்காரன் டாக்டருடன் வந்துசேர்ந்தான்.

"வாருங்கள் டாக்டர் சார்" என்று அன்புடன் உபசரித்து லட்சுமி தேவி படுத்திருக்கும் அறைக்கு அழைத்துச் சென்றார். அயர்ந்து தூங்கிக்கொண்டிந்த லட்சுமியின் கட்டிலருகிலுள்ள ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு நமது டாக்டர் விஜயன் தன் காதலியைக் கூர்ந்து கவனித்தான். அப்பொழுது சற்று புரண்டு படுத்த லட்சுமி கண் விழித்து எதிரேயுள்ள டாக்டரை பார்த்தாள். அம்மா லட்சுமி அவரிடம் உன் கையைக் காட்டு என்றார் உண்மையறியாத சீமந்த முதலியார். "அப்படியே ஆகட்டும் அப்பா" என்று கூறிய வண்ணம், டாக்ரை நன்கு கூர்ந்து கவனித்த காரிகையின் முகத்தில் ஒரு புது ஒளி உண்டாயிற்று. "விஜயா! உமது விஜயம், விரும்பிய பலனளிக்குமா! என்று தனக்குள் சொல்லிக்கொண்டவளாய், மனதை ஒருவாறு இனி நிகழ வேண்டியதை எதிர் நோக்கித் திடப்படுத்தினவளாய், தன் கையை நீட்டினாள். அவளுடைய, மிருதுவான, ஓவியத்திலெழுதவொண்ணு உன்னத திருக்கரத்தைத் தொட்டமாத்திரத்தில், போலி டாக்டர் விஜயனுக்கு சரீரமெங்கும் ஓர் மின்சாரம் பாய்ந்ததுபோன்ற உணர்ச்சி யுண்டாயிற்று. தன்னை மறந்தான் தாங்கொணு இன்பமடைந்தான். தான்யார்? வந்த ஜோலி என்ன? இருக்கும் இடம் எப்படிப்பட்டது? என்ற எண்ணமும், "புலி வாயிலகப்பட்டிருக்கிறேமே" என்ற பயமும் அவனைவிட்டகன்றது. கையழகை வியந்தான். கண்மணியைப்பார்த்தான் - காதலியும் கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய் சொற்கள் யாது பயனுமில என்றவள்ளுவர் உள்ளக்கிடக்கை ஆங்கு தெள்ளத் தெளிய விரிந்து உறைந்தது.

'காதலா!' என்ற வார்த்தை பீறிக்கொண்டெழுந்தது காரிகைக்கு 'ஹா! காதலீ' என்ற வார்த்தை சீறிக்கொண்டெழுந்து கட்டழகனுக்கு. கண்மணி! என்னுலா உனக்கு இவ்வளவு துன்

பம்? என்று வாய் விட்டுக் கூறினுன் விஜயன். "இல்லே, இதுவே எனக்கின்பம். துன்பமின்றி இன்பமின்று இன்பமில்லே கஷ்டமின்றி, சுகமில்லே, என்ற உண்மை தாங்கள் அறியாததா? எனவே கவலே வேண்டாம்" என்ருள். "லக்ஷிமி கண்ணே! இவ்வளவு உன் சரீரம் வாட, அதைப்பார்த்துப் பரிதபிக்கும் பாபியானேனே யொழிய, உனக்குதவும் பாக்கியம் அற்றவனுனேனே! அந்தோ! கடவுளே! எங்கள் காதல், ஈடேற இந்தவுலகில் ஒரு வழி இல்லேயா! ஐயோ கண்ணற்ற சமூகமே" எனப் பலவாறு புலம்பலானுன்.

"மடையன் தூர்த்தன் அயோக்யன் இவனே யார் இங்கழைத்து வந்தது? வைத்தியரை அழைத்து வரச்சொன்னுல் இந்தப் பைத்தியத்தை கூட்டிவந்தது யார்? சீ, அதிகப்பிரசங்கி விடு கையை. நோயாளி ஆளேப்பார்! அகம்பாவம் கொண்ட அசட்டுப் பெண்ணே! எடு கையை திறந்த வீட்டில் நாய்போல் நுழைந்த திருட்டுப் பயலே! போ, போ வெளியே" என்ற சப்தம்கேட்ட இருவரும் அப்பொழுதுதான் தங்கள் நிலே யுணர்ந்தார்கள். நெருக்கடியறிந்தார்கள். திடுக்கிட்டார்கள். இனித் துணிவதே கருமமெனக் கொண்டு பின்வருமாறு கூறினுள். "தந்தையே! என் விஜய துரையைப் பிரிய என்னுல் முடியாது" என்ருள் லக்ஷ்மி. "மாமா! கோபம் கெட்டது, சகலருக்கும் கெடுதல்; பொறுமையைக் கைக்கொள்ளுங்கள். ஆனுல் என் காதலியை கட்டழகியை கண்மணியை நான் பிரியவோ, உங்கள் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து வெளியே போகவோ இரண்டும் இந்நிலேயில் என்னுல் முடியாது" என்று சொல்லிவிட்டான். நாராசம்போன்ற இந்த வார்த்தைகள் நமது சீமந்த முதலியாருக்கு அடக்கமுடியாத ஆத்திரத்தையும் பகுத்தறிவற்ற கோபத்தையும் உண்டுபண்ணிற்று. "சீ நாய்களா" என் வீட்டிலே எனக்கெதிரே கொஞ்சமும் கூச்சமின்றி அச்சமின்றி இவ்வளவு துணிந்த உங்களே உயிரோடு வைத்துப் பார்ப்பதைவிடக் கொன்று பார்ப்பதே மேல் எனக் கூறியவராக தனது ரிவால்வாரைக் கையில் எடுத்தார். பேய்போன்ற ஆவேசத்தால் தூண்டப்பட்ட லக்ஷ்மி "என்னேக்கொல்லுங்கள்" என்று எழுந்து நின்ருள். இல்லே 'சாகவேண்டியவன் நானே!' என்று முன்னுல் வந்தான் விஜயன். இவ்விதம் இருவரும் சாவதற்குப் போட்டி

போட்டுக்கொண்டு ஒருவரை யொருவர் தள்ளிக்கொண்டு வரும் பொழுது 'டப்' என்ற சப்தம். ஐயோ என்ற அலரலுடன் சாய்ந்தான் விஜயன். 'ஹே! ஹிந்து சமூகமே! உன் பிடிவாதத்துக்கொரு பலி, கண்மணி! லக்ஷ்மீ! கலங்காதே இத்தகைய பலி எத்தனை நிகழ்ந்து காதல் பலம்பெற்று வைதவ்யம் ஒழிய வேண்டுமோ? அத்தனையும் நடந்துதான் ஆகவேண்டும். எல்லாம் ஒரு நன்மைக்கே என்று மனந்தேறுவாய்!'

"ஐயோ! எநதையே! என் காதலனைக் கொன்ற தந்தையே! நீங்களும் உங்கள் சமூகமும் அசட்டு பிடிவாதமும் குருட்டுப் பழக்கமும் கடைசியாக இன்று இரு உயிர்களைப் பலிகொண்டு விட்டது. தனியே வாடி வருந்தி அனியாயமாய் சாகப்போகிற ஐயா இதுதானு உங்கள் முடிவு. சரி உங்களை நொந்தாவதென்ன? காதலா வந்தேன் இதோ" என்றலறியவளாய், விஜயன் மேலே வீழ்ந்தாள். இயற்கையிலேயே தூர்ப்பலமும் திடீரென்று எழுந்து நின்று அவ்வளவு நேரம் பேசிய ஆயாசமும் தன் காதலன் ரத்தப் பிரவாகத்தில் கிடப்பதைக் கண்டெழுந்த பதட்டமும் அவன் பாலுள்ள அன்பும் சேர்ந்து அவள் உயிரைக் கொண்டுவிட்டது. கண்ணே என்று கட்டியணைத்தான் விஜயன். நெட்டுயிர் பிரிந்தது, நிசப்தம் குடிகொண்டது.

தன் மகள் மேல் உண்டான இயற்கைப் பாசமும் தன்னால் கொலையுண்ட விஜயன் சரீரமும் கண்ட சீமந்த முதலியாரின் முன் கோபம் ஒழிந்து துயரம் மேலிட வேதனையுற்றவராய், "ஐயோ என்ன இருக்க என்ன செய்துவிட்டேன். ஹா! இந்து சமூகமே! ஈவிரக்கமற்ற உள்ளமே! இதென்ன கொடுமை? பெற்ற தந்தையாகிய நான் என் அருமை குழந்தையின் மனங் கோணவிடாமல் நடந்துவந்த நான்—அவளையே அந்த அருமணியையே அவள் காதலனைச் சுட்டதன்மூலம், கொன்ற மா பாவியாகும்படி செய்துவிட்டதே! கண்ணே! லக்ஷ்மீ! உன் காதலன் பிரிவு, உனக் கழிவு ஐயோ! விஜயா! காதலுக்காக உயிர்விடத் துணிந்த வீரா! உன் உணர்ச்சிதான் என்ன? காதலின் வன்மைதான் என்ன? சற்றுமுன் அறியாப் பாவியானேனே! இனி கடந்ததை எண்ணிப் பயன் என்ன? இவ்வளவு பணமும் தனியனுன எனக்கு—நாதியற்ற

எனக்கு என்ன பாதுகாப்பளிக்கும்? என் கண்மணி சென்ற இடமே என் மனத்துயர ரொழிக்கும். என் செல்வமே! உன்னைக் கொன்ற நான் இனி உயிர்வாழேன். இது சத்தியம் எனக் கூறிக் கொண்டே தன்னையும் சுட்டுக்கொண்டார். ஹா! விஜயா, லக்ஷ்மீ! சமூகமே மூன்றாவது பலி. ஏற்றுக்கொள், கண்ணே! விஜய........ லக்ஷ்மீ..........."உயிர்பிரிந்தது; உடல்விழுந்தது.

---

# கமலாவின் வெற்றி

( அ. வே. அ. )

"காலத்தின் பிற்போக்கான தன்மையை என்னென்றுரைப்பது? முன்னோர்கள் ஏற்படுத்திய சட்ட திட்டங்களை யெல்லாம் கண்டபடி குறைகூறக் கூடிய பெண்கள் நாளுக்கு நாள் மலிந்து வருவது என்ன கொடுமைக்கோ தெரியவில்லை. ஈசனே சண்முகா" என்று சொல்லிக் கொண்டு மிகுந்த கோபாவேச முகத்தினராய் வீட்டின் தாழ்வாரத் திண்ணையில் அமர்ந்தார் சாஸ்திரியார்.

"என்ன? ஒரு நாளும் இல்லாத முகவாட்டம்? வீட்டில் ஏதேனும் மனவருத்தமா, காரணம் தெரியவில்லையே" என்று வினவினார் பக்கத்தாத்து கோபாலய்யர். சாஸ்திரி "கோபமாக இல்லை, எல்லாம் நமது குழந்தை கமலாவின் புத்தியற்ற செய்கையைப்பற்றித் தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்" (கமலா விதவை) கோபாலய்யர்? கமலாவைப்பற்றியா?

சாஸ்திரி:— ஆம்.

கோபாலய்யர்:—நாங்கள் இப்படி வருந்தத்தக்க முறையில் அவள் நடந்து கொள்பளல்லவே. கமலாவோ எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷை பாஸ்பண்ணின பெண், அவள் புத்திசாலியாச்சே, தாங்கள் கூறியது ஒன்றும் விளங்கவில்லையே தெளிவுபடுத்திக் கூறுங்கள்.

சாஸ்திரி:—அதை என் கேட்கிறீர்? நமது கமலா 11 வயதில் விதவையாகி விட்டாளல்லவா? தற்போது அவளுக்கு 19 வயதாகிறது.

கோபாலய்யர்:—அதற்கென்ன இப்போ?

சா:— ஒருவாரத்திற்கு முன்பு இவ்வூரில் 'மாதர் மறுமண'ப் பொதுக் கூட்டம் நடந்த தல்லவா? அப்பொதுக் கூட்டத்திற்கு பெண்மக்கள் திரளாக விஜயம் செய்ததைக்கண்ட கமலாவும் கூட்டத்திற்கு போகவேணு மென்றுதாயாரிடம்விடைகேட்டாள். தாயார் மறுக்கவே கமலா அங்கு போய்க் கொண்டிருந்த ஜனத்திரளுடன் கலந்து அக்கூட்டத்திற்கு சென்றாள், அக் கூட்டத்தில் பேசிய பிரசங்கியின் வார்த்தைகளைக் கேட்ட கமலா இப்பொழுதே மறுமணம் செய்துவைக்க வேண்டுமென்றும் இல்லாவிட்டால் தானே மாதர் மறுமண சகாய சங்கத்தின் மூல்யமாக மறுமணம் செய்து கொள்கிறேன் என்றும் கூறுகிறாள்" என்றார். இதைக் கேட்ட கோபாலய்யர் திடுக்கிட்டு இப்படியும் நம் குலவழக்கம் சீர்கெட்டு போகுமா வென்று கூறி சிறிது நேரம் சென்ற பின் "ஏன் சாஸ்திரியாரே என்னவோ "மாதர் மறுமண சகாய சங்கம்" என்று சொன்னீர்களே அது எங்கிருக்கிறது?'' என்று கோபாலய்யர் கேட்டு முடிப்பதற்குள் வீட்டிற்குள்ளிருந்த கமலா அவர்கள் முன்தோன்றி 'என்ன கேட்டீர்கள்' என வினவினாள். "நீ சங்கத்தின் மூல்யமாக "மறுமணம்" செய்து கொள்ளப் போகிறேன் என்று சொன்னாயாமே அச்சங்கத்தின் வரலாற்றைத் தான் கேட்கிறேன்" என்று முடித்தார் அய்யர்.

கமலா "காரைக்குடி என்ற நகரத்தில் சொ. முருகப்பா, மு. மரகதவல்லி யம்மையார் என்ற தம்பதிகளின் பெருமுயற்சியால் "மாதர் மறுமண சகாயசங்க"த்தை ஸ்தாபித்து, அச்சங்கத்திற்கென உடல், பொருள், ஆவி இவைகளைத் தத்தம் செய்தும் மகளிர் இல்லம் என்ற ஒரு ஸ்தாபனத்தையும் உண்டாக்கி அந்த ஸ்தாபனத்தில் என்போன்ற விதவைகளை ஆதரித்தும், கல்வி, கைத்தொழில் முதலியவைகளை கற்பித்தும், பின்பு என் போன்றவர்கட்கு "மறுமணம்" செய்து வைக்கவும் உதவிபுரிகிறார்கள்.

கோ:—அப்படியா மிகவும் சந்தோஷம்.

கமலா வீட்டினுள் சென்று ஒரு புத்தகத்துடன் இவர்களண்டைவந்து இதோ இப்புத்தகத்தை பாருங்கள் 'மாதர்மறுமணம்'

தங்களைப்போலுள்ள கூட்டத்தாரின் முறையற்ற நூல்களுக்கும் ஆதார பூர்வமான பதில் இவற்றில் யாண்டு நோக்கினும் மலிந்து மிளிருகிறது காண்க என்றாள். இச்சம்பவங்களை யறியாத கமலாவின் தாயாரான அம்புஜம் வெளியில் சென்று விட்டு வீட்டினுள் நுழைந்தாள். சாஸ்திரியார் அம்புஜத்தை வீட்டிலுள்ள அறைக்கு அழைத்து நடந்தவற்றை சொன்னார். சாஸ்திரியார் சொன்ன விஷயங்களை அம்புஜம் கேட்டமாத்திரத்தில் கோபாவேசத்துடன் இது என்ன கொடிய செய்கை, பதி இழந்த பெண்களுக்கு மறுபடியும் திருமணம் செய்யலாமா? இது நம் குலவழக்கத்தையும், சட்டத்தையும் மீறுவதாகுமே என்று சொல்லி முடித்தாள்.

கமலா தன் தாயாருடைய அபிப்பிராயத்தைக்கேட்டாள். இது நமது குலவழக்கத்திற்கு தீமையையே விளைவிக்கு மென்றும், இக்கொடூரமான செய்கைகளுக்கு நம் குலம் ஆளாகக் கூடாதென்றும் அம்புஜம் தெரிவித்து விட்டாள். இது கேட்ட கமலா தன் முயற்சியைக் கைவிடாது அவளுக்கு சமாதானம் கூறி தன்வழிக்குத் திருப்ப முயன்றாள். "உங்கள் குலவழக்க மென்பது என்ன? இளம் வயதில் பதி இழந்த பெண்களை நகைகள் அணியவிடாமலும், நல்ல புடவைகள் உடுத்த விடாமலும், வெள்ளப்புடவைகளை அணியச் செய்து தலையை மொட்டையடித்து வீட்டினுள் இருக்கச் செய்வதும், வெளியில் போகவேணும் என்று நினைத்து வெளியே சென்றால், இவள் அமங்கல்யவதி என்றும் இவள் கண்ணில் தென்படக் கூடாதென்றும் சகுனம் பார்ப்பது தானா உங்களின் குலவழக்கம்? கணவன் என்றால் என்ன வென்றே அறிய முடியாத பால்யத்தில் மண முடித்து இவ்வளவு அல்லல் கட்கும் ஏன் ஆளாக்குகிறீர்கள்? நீ பெற்ற பெண்ணல்லவா நான்? அதிபால்யத்தில் கணவனையிழக்க வேண்டியது என் தலைவிதியானால் மீண்டும் மறுமணம் செய்து கொளவதும் என் தலைவிதியென்று ஏன் எண்ணக் கூடாது? சமூகச் சட்டமென்று சொல்லும் அநியாய கோலங்கட்கு ஆளாகி அல்லலுறுவதுவதைக் காண உன்மனம் இடந்தருகிறதா அம்மா. சிறிது யோசித்துப்பார்" என்று மிக உருக்கமாகச் சொன்னாள். தம்பதிகள் ஒருவாறு சீர்திருத்தமடைந்து "மறுமணம் செய்து வைக்கிறோம்" என்று வாக்களித்தார்கள்.

ஒருவாரம் சென்றபின் சாஸ்திரியார் தன் மகளுக்கேற்ற மணவாளனை தேடி திருமணத்திற்காகப் பேசி முடித்தார். அவன் தான் கமலாவின் மாமா மகன். சுப்பிரமணியன் என்று பெயர்; படித்தவன். இவனுடைய தகப்பனர் வக்கீல்.

திருமணத்திற்காக மாதர் மறுமண சகாய சங்கத்திற்கு அழைப்பு இதழ் அனுப்பினர்கள். கல்யாணத்திற்காக சுப்பிரமணியன் குடும்பத்துடன் போய்ச் சேர்ந்தான். சங்கத்திலிருந்தும் சில பிரமுகர்கள் திருமணத்திற்கு சென்றார்கள். உள்ளூர் ஜனங்களும் இன்னும் சாஸ்திரியாரின் பந்துக்களும் வந்திருந்தனர். திருமணத்தை சீர்திருத்த முறையில் நடத்துவதென முடிவு செய்தார்கள். அன்று புதன்கிழமை. வியாழக்கிழமை யன்று திருமணம். முகூர்த்தத்திற்கான ஏற்பாடுகள் செய்திருந்தது. கதிரவனும் வெளிவந்தான். பொழுதும் விடிந்தது. மணமகனும், மணமகளும் கதராடை அணிந்திருந்தனர். மகாத்மா காந்தியின் படமும், ராஜாராம் மோகன்ராயின் படமும், சுபாஷ்போஸின் படமும் இன்னும் தேசீயத் தலைவர்களின் படமும் மணவரையை சுற்றிலும் தொங்கவிட்டிருந்தன. மணமகனும், மணமகளும் மணவரையில் அமர்ந்தனர். மேளதாளத்தினிடையே மணமகனும் மணமகளும் மாலைமாற்றிக் கொண்டனர். பிறகு சீர்திருத்தவாதி ஒருவர் எழுந்து "மாதர் மறுமணமும் நமது கடமையும்" என்பதுபற்றி சொற்பொழிவாற்றினர். சந்தன தாம்பூலங்களை எல்லோரும் பெற்றுக்கொண்டு கமலா சுப்பிரமண்யத்திற்கு ஜே என்றும் மாதர் மறுமணத்திற்கு ஜே என்று கோஷித்தவண்ணமாய் வெளியேறினர்கள்.

கருணை உள்ள இடத்தில் —
— விதவை இல்லை.

வாலிபர்களுக்கு

# காதலா? காமமா?

## (1)

(பி. தனுஷ்கோடி)

காதல்! காதல்! காதல்! காதல் போயின், காதல் போயின், சாதல்! சாதல்! சாதல்!—என்று அன்று தேசியக் கவி பாரதியார் கூறினர்.

அதில் எவ்வளவு உயர்வு இருக்கின்றது? தத்துவம் நீதி காணப்படுகின்றது? ஆனல் நம் நாகரிக வாலிபர்கள் இதனின் கருத்தை—பெருமையை சரிவர அறிந்து நடப்பதில்லை.

மாருமல் தப்பர்த்தம் செய்து கொள்கின்றனர். பிறவியின் பயன் ஒருவரிடம் காதல் கொண்டுதான் தீரவேண்டும் என்பது அவர்களின் கொள்கை. தன்னை ஒருவள் விரும்பாவிடினும் சரி, வழியில் போகும் ஒரு அழகியைக் காதலித்து, அதற்கான உபாயங்கள் எல்லாம் செய்யவேண்டும். அவன் காதலித்த ஸ்திரீயை ஏற்கனவே வேறொருவன் காதலித்திருந்தால், அதற்கான போராட்டம், கொலையில் கூட முடிகிறது. இதுதான் "காதலின் றேல் சாதல்" என்பது அவர்கள் திருவாக்கு. ஆனல் இதை ஒருநாளும் "காதல்" என்று ஒப்புக்கொள்ள முடியாது. அபிமான ஸ்திரீ அல்லது துராக்ரகம் என்றுதான் கூறவேண்டும். சாதாரணமாக எனக்கு ஏற்பட்ட இரண்டொரு அனுபவங்களைக் கூறுகிறேன்.

### கண்டதும் காதல்

'ஜாலி'யாக நாலு நண்பர்களுடன், சினிமா பார்க்கவோ, கண் காட்சிசாலைக்காவது, கோயில்களுக்காவது, கடற்கரைப் பக்கமாவது செல்லுகிறேன்.

அங்கு பட்டு சேலைகள் உடுத்தி அழகிய ஆபரணங்களை அணிந்து, சுத்தமாகவும், நாசூக்காகவும், புன்முறுவலுடனும், ஓர் யுவதி அவன் கண்களில் படுகிருள். அவ்வளவு தான் மின்சார சக்திபோல் அவன் உடலில் காதல் சக்தி பாய்கிறது.

மறுநாளே அவன், "என்ன பிரதர்! நேற்று அவளைப் பார்த்தது முதல், எனக்கு அவள் மீது காதல் ஏற்பட்டுவிட்டது. இனி அவளை விட்டு ஒரு க்ஷணமும் பிரிந்து இருக்க முடியாது" என்று கூறுகிறான்.

இது என்ன விளையாட்டு? என்றால், இதுதான் "கண்டதும் காத" லாம்! ஐயோ பாவம்! அந்த யுவதியை இதற்கு முன் பார்த்தே இருக்கமாட்டான். அவள் யார் என்பதை அறிந்து கொள்ளவும் முயற்சிக்கமாட்டான். ஆனால் அதற்குள் உயிர் போகும் நிலையில் காதல் ஏற்பட்டுவிடுகிறது. என்ன விசித்திரம்!

விவாகமாகி புது குடித்தனம் செய்யும் குடும்ப ஸ்திரீயாயிருக்கலாம். (நேயர்களே! இதனால் எவ்வளவு ஆபத்து என்பதை யோசியுங்கள்.) ஒருவேளை விவாகமாகாத கன்னியாயுமிருப்பாள். அன்றி விவாகமாகி விதந்துவாயும் இருப்பாள்.

அத்தகைய அபலைகளின் மீது எவ்வளவு அனர்த்தங்கள் நேரிடுகின்றன? "ஏண்டா! அது போனால் போகிறது. என்ன ஜாதி யென்பதை கவனித்தாயா?" என்று கேட்டால், கன்னத்தில் அடிப்பதுபோல் பதில் சொல்லுகிறான்.

"அதைப்பற்றி நவர்மெண்ட்! கலியாணம் செய்துகொள்ளாவிட்டாலும், அவளுடன் எப்படியாவது இன்பம் அனுபவித்துத்தான் ஆகணும்! இல்லாவிட்டால் என் உயிரைப்பற்றி அக்கரையில்லை........"

இதற்கு என்ன சொல்வது? இதுதான் பாரதியார் போதித்த காதலும், சாதலும் போலும்!

## என் மனைவி கர்நாடகம்

அது போகட்டும் ஒருவன் சொல்கிறான். "என் மனைவி சுத்த கர்நாடகம்! சமையல் சரியாக சமைக்கத் தெரியாது. நாலு பேரைப் போல் நன்றாக இருக்கத்தெரியாது. ஒரு நல்ல புடவை எடுத்துக்கொடுத்தால் உடுத்திக்கொள்ள வக்கில்லை, முகத்தில் ஒரு புன் சிரிப்பு இல்லை. எப்பொழுது பார்த்தாலும், அழுக்கடைந்த முகம், கையெல்லாம் சாணி, காலெல்லாம் தூசி—

சேறு, ஐயையோ மூக்கிலிருந்து சளி, அந்த சளி வாயில் விழுவதுகூடத் தெரியாது..............கண்றாவி! கண்றாவி! இந்தப் பீடையைக் கட்டிக்கொண்டு எப்படி ஐயா அழுவது?"

அவனை ஒரு அப்பாவி அசடு என்றுதான் சொல்லவேண்டும். தன் மனைவியின் முகத்தை-அழுகை, மூக்குச் சளியுடனும், தூங்கி எழுந்த முகத்துடனும், கையில் சாணி வட்டி விளக்குமாறுடன் (துடைப்பம்) இருக்கும் பொழுதுதானா பார்த்து ரசிக்கவேண்டும்?

குளித்துவிட்டு, தலை சீவிக்கொண்டு, அழகிய ஆடை ஆபரணங்களுடன் ஒழுங்காக இருக்கும்போது பார்த்தால், அவளே தேவ கன்னிகையைப்போலவும், ரதியைப் போலவும் காக்ஷியளிப்பாளே.

அதை விட்டுவிட்டு பிறர் மனைவியின் பேரிலும், இளம் விதவைகள் பேரிலும், தாஸிகள் மீதும் ஆசையை வைத்துக்கொண்டு மனையாளைப் பார்த்தால் எப்படியிருக்கும்? கோரமாக—அசிங்கமாகத்தான் புலப்படும். மற்றபடி நாலுபேரைப்போல் நன்றாக இருக்கத் தெரியாது என்பதெல்லாம் வெறும் பித்தலாட்டம்; பொய். உண்மையில் சொல்லுகிறேன். எந்த ஒரு பெண்ணும் தன் வாழ்க்கையில் அருசையுடனோ, குரூரமுடனோ இருக்க விரும்பமாட்டாள். மாறாக, இயற்கை அழகுடன் பன் மடங்கு செயற்கையுடன் சேர்த்து வசீகர அழகியாக விளங்குவாள். அவ்வித அழகின் சக்தியால் தன் புருஷனை மகிழ்விக்க ஆசைப்படுவாள்.

இதைத் தவிர, மனைவியை வேண்டுமென்றே குறைகூறிக் கொண்டு அடுத்த வீட்டு, எதிர்வீட்டுப் பெண்களிடம் தன் காமத்தை செலுத்துகின்றனர் என்பதை மறுக்கமுடியுமா?

## காதலே இல்லை ஆனால்...

மற்றொருவன் கூற்றைப் பாருங்கள்: "என் வாழ்க்கையில் காதல் என்ற விதையே ஊன்றவில்லை. அப்படி என்னை காதலிப்பவளும் ஒருவரும் இல்லை. ஆனால், சில பெண்களைப் பார்க்கும் பொழுது, எனக்கு என்னை யறியாமலே ஒருவித காம உணர்ச்சி உண்டாகிறது. ஆகவே அப் பெண்களை அடைய விரும்புவதில் தப்பு ஒன்றுமில்லையே?"

நல்ல கேள்விதான். சாதாரணமாக வசீகரம் பொருந்திய பெண்களைப் பார்க்கையில், கலியாணமாகாத காளையர்களுக்கு இயற்கை உணர்ச்சி பீறிட்டு எழும்புவது சகஜந்தான். ஆனால் அதை வீண் விரயம் செய்வது கூடாது. வாழ்க்கைப் போராட்டத்தில் காதல் இன்றிருந்து நாளை செல்வதல்ல. காதலை வெறும் காமமாக்கிவிடக் கூடாது. அவ்விதம் செய்வது உடலுக்கும் கெடுதல்; பிறரைக் கெடுத்த தோஷமும் ஏற்படுகிறது. அவ்விதம் இயற்கையாக உணர்ச்சி ஏற்படுவதை 'தன்னடக்கம்' என்னும் சக்தியால் தடைசெய்யவேண்டும். நேரிய முறையில் அவளை விவாகம்செய்துகொள்ள முயற்சிக்கலாம். அவ்விதம் கிட்டவில்லையாயின் அதை மறந்துவிடுவதே உத்தமம். அவசரப்பட்டு தன்னடக்கம் எனும் சக்தியிழந்துவிட்டால், அவன் மனிதனே அல்ல.

## நான் என்ன செய்யட்டும்?

"நான்பாட்டுக்கு ஒருநாள் சாலையின் வழியே சென்றுகொண்டிருந்தேன். அப்போது ஓர் இளம் யுவதி—மிகவும் ஏழ்மை குடும்பப் பெண்தான்—என் எதிரே வந்தாள். இதற்கு முன் நான் அவளைப் பல தடவைகளில் பார்த்திருக்கிறேன். ஆனால் அப்பொழுதுமட்டும், புதிய தேஜசுடனும் கண்டேன். அதே நிமிஷம் என் உடலில் ஓர் உணர்ச்சி பாய்ந்தது. அவளுக்கும் அப்படித்தான் இருந்ததோ என்னவோ, உடனே புன்னகைபூத்தவள் தன் ஆடைகளை ஒழுங்குபடுத்திக் கொண்டாள். அவளின் இச் செய்கை என் காமத்தை அதிகரிக்கச் செய்தது. அது மட்டும் ஒரு தனி விடுதியாக இருந்திருப்பின் என் ஆவேசம் கட்டுக்கொள்ளாதுபோயிருக்கும்"

"பின் அவளிடம், என் தன்னடக்கம் எப்படி வெற்றி பெறும்? அவள் மாய்கையில் வீழ்ந்தேன். இருவரின் கற்புக்கும் பங்கம் ஏற்பட்டது. இதற்கு நான் என்ன செய்யட்டும்? நீங்கள்தான் சொல்லுங்களேன்"— என்று தன்னடக்க வாதி ஒருவர் கூறினார்.

இளங் குமரிகளின் கட்டு குலையா உறுப்புகளைப் பார்த்த மாத்திரத்தில்,வாலிப காளைகள் அவற்றைப் பெற இச்சிப்பது இயற்கையே. அவ்வாறு நடப்பதும் தவறு எனச் சொல்ல முடியாது.

ஆனால், அவள் தன்னால் விவாகம் செய்யப்படக்கூடியவளாக இருக்கவேண்டும். அனாவசியமாக தன்னடக்கம் என்னும் சக்தியை விரயம் செய்வது தகாது. அப்படிச் செய்வது, காமவெறியன்—பித்துக்கொள்ளி—வரமோஹினி பிடித்தவன் என்ற இழிவான பட்டத்தை சேர்த்துக்கொள்வதாகும்.

## 2

நவீன வாலிப காதலர்களின் போக்கு, எதையும், சரிவர ஆராயும் திறன் இன்றி, குருட்டு ஆடு கிணற்றில் விழுந்தால் நாமும் தான் விழவேண்டும் என்ற கணக்காகச் செல்கின்றனர். அவன் ஏன் அப்படிச் செய்கிறான்? அந்தப் பெண்ணுடன் ஏன் அப்படி ரகஸியம் பேசுகிறான்? அவனுக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்? என்பதைப்பற்றியே மற்றவனுக்கு யோசனையுண்டாகிறது.

அடே! அவன் அப்படிச் செய்வது தவறு. அவன்தான் அப்படிச் செய்தால் நாமும் அப்படிச் செய்யவேண்டுமென்பது என்ன கட்டளை? நாம் நேரான வழியில் ஒழுங்காகப் போவோமே! என்ற கருத்துக்களே ஏற்படுவதில்லை.

வீட்டில் பெற்றோர்களும், உறவினர்களும் சேர்ந்து ஓர் அழகியை கலியாணம் செய்து வைத்திருப்பர். ஆனால் அது இந்த நவீன வாலிபனுக்கு பிடிக்கவே பிடிக்காது. சினிமாவில் காணும் ஒரு நடிகையைப்பற்றி கனவு கண்டுகொண்டிருப்பான். எப்படியாவது இவ்விடத்தை விட்டகன்று ஒரு ஸ்டுடியோவில் சேர்ந்து, ஒரு பாகவதரைப்போலவோ, ஒரு வித்வானைப்போலவோ, பேரும் புகழும் அடையவேண்டும். அப்பொழுதுதான் திரைப் படத்தில் காதலித்த யுவதியை அடைவது வெகு சுலபம் என்றெல்லாம் மனக்கோட்டை கட்டுவான்.

இத்தகைய ஒருவனின் அங்க லக்ஷணத்தைக் கவனித்தாலோ, குஷ்டரோகம் பிடித்தவனைப்போன்று முகம் எல்லாம் கருத்து, பருக்கள் சூழப்பெற்று விகார முடையவனாக இருப்பான். தலையோ எண்ணெயைக் கண்டு எட்டு வருஷம் இருக்கும். கண்ணின் ஓரங்களில் பீளை வழிந்துகொண்டிருக்கும். அதை சுத்

தப்படுத்தத் தெரியாது. அணிந்திருக்கும் ஆடைகளோ ஐயையோ........மிகவும் ஆபாசமானவை. அழுக்கின் துர்நாற்றம் வீசும்.

இம்மட்டோடு இப்புண்யாத்மாக்கள் சும்மா இருப்பதில்லை. அவர்களுக்கேற்றாற்போல் சில பத்திரிகைகளில் சினிமா விஷயம் பற்றி "கேள்வி பதில்"கள் வெளிவருவது மிகவும் அனுகூலமாக இருக்கின்றது.

வேண்டுமென்றே, சில குறிப்பிட்ட சினிமா நடிகைகளின் பெயரை எழுதி, அவர்களின் விலாசங்களையும் இருப்பிடத்தையும் வினவுகின்றனர். அதுமட்டுமல்ல, அவர்களின் வயது, பருவம், குணதிசயங்கள் முதலியவற்றையும் அறிய முயற்சிக்கின்றனர். வாழ்க்கையின் போக்கு, ஜாதி, எல்லாம் இவர்கள் அறிந்து கொள்ளவேண்டுமாம்! எதற்காகவோ தெரியவில்லை. எந்த சினிமா கம்பெனி ஆரம்பிக்கப் போகிறார்களோ தெரியவில்லை.

இவையெல்லாம் காதலின் போக்குத்தானா? இதற்கு அந்த ஆசிரியர், விவரம் தெரிவிக்க முடியாது என்று பதில் கூறிவிட்டால் சீறி விழுகின்றனர். வாய்க்கு வந்தபடி, கைக்குத் தோன்றிய படி, எழுதி ஒரு முக்காலணா கார்டை செலவழிக்கின்றனர். மீறிக் கேட்டால் உண்மைக் காதலின் தன்மையாம்! காமமே பிறப்பாகக்கொண்ட இத் துராத்மாக்கள் என்று ஒழிவாரோ, அன்றே நம் நாடு சுபீக்ஷமடையும்.

இக் காமுகர்களின் மற்றொரு அந்தப் புரத்தை கவனிப்போமானால், மயிர் கூச்செலெடுக்கும். நல்ல மாநிறம் இருக்கிறது. செலவு செய்ய போதிய பொருள் இருக்கிறது. அழகிய ஜரிகை வேஷ்டி யுடுத்தி டாம்பீகம்செய்துகொள்ள சௌகரியம் இருக்கிறது இன்னும் வேண்டுமானால், மன்மத சிருங்கார லீலைகள் செய்ய "ரதிகேளி விலாஸ" பங்களா இருக்கு. ஆயினும் என்ன?

ஒரு சினிமாபார்க்க நல்ல சுத்தமான உடையுடுத்தி ஒரு பெண் வரக்கூடாது. பக்திரசம் ததும்பும் மங்களமயமான, ஜோதி விளக்கு சுடர் விட்டெரியும், கோவிலுக்கு பட்டுப் உடுத்தி ஒரு பெண் வரக்கூடாது. குளத்திற்குத் தண்ணீர் எடுக்க செல்லக்

கூடாது. இன்னும் சொல்லப்போனல், ஒரு யுவதி தன் வீட்டு வாசலில்கூட நிற்கக்கூடாது, இந்த நவீன வாலிபர் கண்களுக்கு முன்! அப்படியாரேனும் தப்பித் தவறி அவர்கள் கண்களுக்கு பட்டுவிட்டால்...........அப்பப்பா! அவர்களால் அந்த காதல் தீயி லிருந்து தப்பமுடியாது. எப்படியேனும், அவர்களை வாரியணைத்து, தீயை அணைத்து விடுவார்கள்.

இவையெல்லாம் எதற்காக? காதலின் மாட்சியா? இல்லவே இல்லை. வெறும் காமம்! பித்து! சதா பெண்களைப்பற்றியே ஸ்தோத் திரம்! வியாபாரத்திற்கு வந்தாலும் சரி! உத்தியோகத்திற்கு வந்தா லும் சரி! வழி தெரியாது வந்து "ஐயா!...........க்கு வழி எது?" என்று கேட்டாலும் சரி! எங்கும் காதல் மயம் ஜகத்! அட ராமச் சந்திரா!

இங்குதான் இப்படி என்ருல் இந்த மன்மதசிருங்கார, அலங் கார புருடர்கள், கிராமப் புறத்திற்குச் சென்ருலும் சரி. இதே இழவுதான்! (கிராமாந்திரங்களுக்குச் செல்வது, ஏதாவது ஒரு அப்பாவி பெண்ணைப் பிடிப்பதற்குத்தான்) கிணற்றில் ஜலம் இறைத்துக்கொண்டிருந்தாலும், ஆடு, மாடு மேய்த்துக்கொண் டிருந்தாலும், (குலம், கோத்திரம் அந்தஸ்துபற்றி கவனிப்பதே இல்லை.) கற்பழிக்கத் துணிந்துவிடுகின்றனர். ஐயோ பாவம்! பட்டணத்து வாலிபர்கள் தன்னை ஒரு பொருட்படுத்தி அழைப் பதை மதித்து, எப்படி மறுப்பது என்ற கிலேசத்தினுல், கல்வி யறிவற்ற பேதைகள் இத்துன்மார்க்கர்களுக்கு உடன்படுகின்ற னர். அதுவுமன்றி வறுமையிலேயே சதா திளைத்து, உடல்மெலிந்து உள்ளம் குமுறி கண்ணீர் விட்டு கதறும் நிலையிலுள்ளவர்களுக்கு இக்காமுகர்கள் கொடுக்கும் சில்லரைப் பணம் மகிழ்ச்சியடையச் செய்கிறது. ஒரு காசு கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கை யில் வெள்ளி ரூபாயாக ஒரு ரூபாய் கையில் கிடைக்கையில் கவன மெல்லாம் எங்கோ ஓடி ஒழிந்துவிடுகின்றது. அவளின் தாத்தா, பாட்டி கூறிய சீதா, திரௌபதி, தமயந்தி முதலிய கற்பரசி களின் கதையின் கருத்துகள் கவனத்திற்கு வருவதில்லை. இவ் விதம் துராக்கிரமமாக கற்பழிவதால் பிற் காலத்திற்கு நரகத்தில்

எவ்வித தண்டனை கிடைக்கும் என்பதைப்பற்றியும் மறந்துவிடுகின்றனர். அந்தோ! ஒரு பாவமுமறியாத விவேகமற்ற—பேதைகளுக்கு இதனால் எவ்வளவு அனர்த்தங்கள் ஏற்படுகின்றன? தாய்க்கு தெரியாமல், தந்தைக்குத் தெரியாமல் கள்ளத்தனமாக சோரம் புரிந்து கர்ப்பமுற்று சிசுஹத்தி புரிகின்றனர்? கர்ப்பிணியாக இருக்கும்பொழுதே சிலரின் பேச்சைக் கேட்டு மாற்று மருந்தென்று நம்பி விஷத்தை அருந்தி மாள்கின்றனர்?

பகுத்தறிவுடையோர் என்று கூறிக்கொள்ளும், இந்நவீன நாகரிக வாலிபர்களினால் எவ்வளவு துன்பம்? நீதியற்ற—முறையற்ற இச்செய்கையினால், குழந்தையை பிரசவித்து. ஜாதி பிரஷ்டம் செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பேர்? வாலிபர்களே! ஆலோசியுங்கள்! இது உங்களுக்கு தர்மமா? அல்லது நாட்டிற்குத்தான் க்ஷேமமா? ஆதரவற்ற அனாதைகளை ரக்ஷிக்கிறேன் என்று அழைத்துவந்து, ஒரு இரவு, இரு இரவு வைத்திருந்து சோரம் புரிந்து "கழுதை!........எக்கேடு கெட்டுப்போ!" என்கிறீர்களே! இது நியாயமாகுமா? அப்படிப்பட்ட அனாதைகள் தென்படின் கௌரவமுள்ளவர்களால், உயரிய முறையில் நடத்தப்படும், "அனாதை விடுதி" களுக்கு அனுப்பினால் உங்களுக்கு எவ்வளவு கௌரவம்! அந்தப் பெண்ணும் தன் ஆயுள் உள்ளமட்டும் உம்மை வாழ்த்துவாளே! உலகத்தில் சிற்றின்ப சுகத்தை அனுபவிக்கவும், அல்வா ஜிலேபியாக வயிறார உண்ணவும் தான் பிறந்தோம் என்னும் மூடத்தனமான கொள்கையை அகற்றுங்கள்! பிறவியின் பயன் பிறருக்குச் சேவை செய்தலே என வீறுகொண்டு எழுங்கள்! மான மரியாதை உணர்ச்சியுடன் வாழ முற்படுங்கள். வீணில் மரக் கட்டைகளாக இருக்கவேண்டாம்!

---

**விதவை கண்ணீர்**

**வீட்டை அழிக்கும்**

# கர்ப்ப ஸ்திரீகளைக் காப்பாற்றுவது ஒரு தெய்வத் தொண்டு

நெல்லை ஜில்லா இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் விடுதி யொன்றைத் திறந்துவைக்கும் பொழுது சுகாதார மந்திரி கனம் டி. எஸ். எஸ். ராஜன் பேசியதாவது:—

உலகத்திலுள்ள எல்லாத் தாய்மார்களிலும் இந்தியத் தாய்களுக்குத் தான் ஸ்திரி வைத்திய உதவி மிக அவசியம். பிரசவ ஸ்திரீ பாதுகாப்பு சிசுபரிபாலன வேலைகள் இந்த நாட்டில் மிக அவசியமானவை. எப்போது கடவுள் மனிதனையும் ஸ்திரீயையும் சிருஷ்டித்து பிரஜோத்பத்தியை ஏற்படுத்தி விட்டாரோ, அப்போது பிரசவ ஸ்திரீ பாதுகாப்பு, சிசுபரிபாலன வேலை இரண்டும் இன்றியமையாதவை. பிரஸவ ஸ்திரீகளுக்கு உதவி செய்வது ஸ்ரேஷ்டமான சேவையாகும். தாய்மார் பதவி மிகவும் புனிதமானது. இந்தியாவில் தாய்மார்களுக்கு மிக உன்னத ஸ்தானம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு உபகாரம் செய்வது தெய்வ சேவை செய்ததுக் கொப்பாகும். இந்த உத்தமமான வேலையில் ஈடுபட்டவர்கள் கடவுளின் தூதர்களாவார்கள். பிரசவத்துக்கு முன் தாய்மார்களைப் பாதுகாப்பதான உங்கள் தொண்டுதெய்வீகத் தன்மையானது. இது சம்பந்தமாக, சில புள்ளி விவரங்களைக் கவனிக்கவேண்டும். கவனித்தால், இம்மாதிரி தொண்டு எவ்வளவு அவசியமென்று தெரியும்

**சிசு மரணம் 1000 பிறவிக்கு**

| 1935. | 1936. | 1937- |
|---|---|---|
| 205.73 | 172.06 | 134.65 |

**கர்ப்ப ஸ்திரீ மரணம் 1000 கர்ப்ப ஸ்திரீக்கு**

| | | |
|---|---|---|
| 13.68 | 16.07 | 27.70 |

ராஜதானி சராசரி கர்ப்ப ஸ்திரீ மரணம் 12.67 ஆக விருக்க இங்கே 27.70 இருப்பது மிகவும் வருந்தத் தக்கது. ஆகவே, கர்ப்ப

ஸ்திரீ, பிரசவ ஸ்திரீயை கவனிக்க வேண்டியது எவ்வளவு அவசிய மென்று தெளிவாகிறது. ஐரோப்பாவில் எப்படி 1000-க்கு 3 ஆக கர்ப்பஸ்திரீ மரணத்தை குறைத்தார்களே, அப்படி இங்கே யும் முயல வேண்டும். வியாதி வருமுன் தடுப்பதே நல்லது.

சிசு பரிபாலன வேலை, பல வகைக் காரணங்களையும் ஹேஷ் யங்களையும் பொறுத்திருக்கிறது. சாவு அதிகம். பலமற்ற தாய் மார்களாலும், போதிய உணவில்லாத குழந்தைகளாலும் மரணம் ஏற்படுகிறது.

கலப்பில்லாத பசுவின் பால் மிகவும் நன்மையைச் செய்யும். அந்த மட்டில் குழந்தைகள் காப்பாற்றப்படும். குழந்தைகளை எப் படி வளர்க்க வேண்டுமென்று தாய்மார்களுக்கு போதிக்கப்பட வேண்டும். ஒரு வருஷத்துக்குள் குழந்தைகள் மரணமேற்படுவ தைத் தடுக்க, சில வழிகளிருக்கின்றன. முதலாவது,யார் பாலுக்தா குப் பதில் அதற்கீடாக எதுவும் வராது. ஆகையால் கூடுமானவரை தாயாரே குழந்தைக்கு தன் பாலைக் கொடுப்பது நல்லது. ஆனால் தாயாரிடம் பால் போதாவிட்டால், தினம் அரை அவுன்ஸ் சிகப் புப் பழ ரசத்தை குழந்தைக்குக் கொடுத்தால் குழந்தை வளரும் இந்தத்துறையில் உதவி பெற முயல வேண்டும். இது தவிர சுத்த காட்லிவர் எண்ணெயை குழந்தை மேல் தடவினால் அதற்கு புது ஜீவனை கொடுத்தமாதிரியாகும். இம்மாதிரி சிசு பரிபாலன வேலை செய்வது மிகவும் புனிதமானதாகும்

---

**விதவையர்க்கு - -**

**- - விடுதலை நல்குவீர்!**

# விதவையர்க்கு மணம் ஆற்றுங்கள்

அகில மலாயா செட்டியார் இளைஞர் சங்கத்தின் மூன்றாவதாண்டு விழாவில் தலைமை வகித்த திரு. சி. ராம. சு. இராமசாமி செட்டியார் பேசியதன் ஒரு பகுதி:—

"சமூக நலன் கருதிவரும் சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்வது பற்றிச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். விதவை மணம் அவசியமெனப் பலவாறு கூறப்படுகின்றது. கார்த்திகைப் புதுமை திருவாதிரை முதலான சிறு விசேஷங்களை நிறுத்துவதையும், விசேஷநாட்கள் குறைத்துச் செய்வதையும் அறிஞர்கள் உணர்ந்து செய்து வருகின்றார்கள். விதி வசத்தால் கணவனை யிழந்து வாழ்வில் நலங் குன்றி வாழும் மங்கையர்க்கு அமைதியும் மன ஆறுதலும் உண்டாவதற்கு நம் சமூகம் வழி காண வேண்டியது அவசியமேயாகும். அவ்வழி மிகுந்த துரிதமான வேகத்தில் கணவனை இழந்த மங்கையர்க்கு மணமாற்ற முற்படுவது என்ற நிலையிலிருத்தல் கூடாது. காதல் வாழ்வில் மனமுவந்து ஈடுபட்டுக் காதலர்ப் பிரிவில் வாட்டமுறு மங்கையர்க்கு அமைதியும் சாந்தியும் நிலைபெற ஓர் தனி இல்லம் அமைத்துச் சிலகாலம் அவ் வில்லத்தில் மன நிம்மதியாகத் தம்மையொத்த மங்கைமாருடன் கூடி அறவழி பயிலுவித்தல் வேண்டும். நல்ல விஷயங்கள் போதிக்கப் பெறுதல்வேண்டும். இப்படி இரண்டாண்டுகளாவது சென்று மனந் தேறுதலடைந்த பின்னர் அவர்கள் மனச் சான்றுக்கும் எண்ணத்தின் போக்கிற்கும் இயைந்தவாறு வெளிவருவது சிறப்புடையதாகும். மண வினையில் விருப்பமுள்ளவர்களாய் மணம் செய்துகொள்ள விரும்புவார்களாயின் அம் மணவினை தாய் தந்தையர்களால் மனமுவந்து செய்துவைக்கப் பெறுதல் வேண்டும். இவ்வாறு மங்கையர் மகளிர் இல்லத்தே அமைதி வாழ்வுபெற்று மன ஆறுதலடையுங் காலத்துச் சுற்றத்தவர்களின் மணவினை முதலாய விசேஷங்கள் கருதி அழைத்துச் செல்லுதல் கூடாது. அவர்கள் மீண்டும் புனித வாழ்வில் கலந்துகொள்ளும் தருணமே அவர்கள் மனக்கிலேசம் நீங்கி மகிழ்ச்சியடையும் சந்தர்ப்பமென

உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இப்புதிய சீர்திருத்தம் நவீன முறையில் இன்னும் நம் சமூகத்தே விளக்கமுற ஏற்றுக்கொள்ள ளப்படவில்லை யாகையால் உய்த்துணர்ந்து விதி விலக்குகளைச் சீர்திருத்திக் கொள்ளுதல் வேண்டும். கணவனை இழந்த மங்கை யர் யாவர்க்கும் தனி இல்லம் ஏற்படுத்தி அதற்கனுப்புவதைத் தயங்காது ஏற்றுக்கொள்ள முற்பட்டால் பின்னர் வேண்டிய சீர்திருத்தங்கள் தானே வந்து சேர்ந்துவிடும். சமூக நலன் கரு திப் பாடுபடும் மெய்யன்பர்கள் சிலர் முழு ஆர்வத்துடன் பணி யாற்ற முற்பட்டிருப்பதும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பதும் பாராட்டத்தக்கன. அவர்கள் வெற்றி பெறவேண்டிய உதவி புரிதல் இன்றியமையாதது"

---

# துணிந்தோர்க்குத் துக்க மில்லை

(காதிபந்தர் டி. கே. முத்துசெட்டியார்)

தற்போது விசைச் சக்கரம் பூட்டப்பெற்று கை ராட்டினம் சுழல்வதுபோல காலச் சக்கரம் அதிவேகமாகச் சுழன்று போய்க் கொண்டிருக்கிறது. அந்த சுழற்சிக்கேற்ப, நாட்டிலும் அதி தீவிர வாதிகள் தோன்றிப் பல வகைகளில் பெரு மாற்றம் விளை விக்கச் செய்வது இயற்கையின் நியதியாகும். நமது மதத்துக் கும் கொள்கைக்கும் ஒவ்வாத எவ்வளவோ ஒழுங்கீனங்கள் நடக் கின்றன. ஒரு இயக்கமானது வெற்றியடைய சிந்தனையும் செய் கையும் இரண்டும் ஒற்றுமையாக இருக்கவேண்டும்.

பெண் என்றால் பேயும் இரங்கு மென்பார்கள். ஒரு அரை யணு நூல் கயிற்றை மங்கையின் கழுத்தில் கட்டிய தோஷத்துக் காக (சில வகுப்பில் தான் கட்டாமல் புண்ணியவானுன ஒருவன் கட்டியதற்காக) சாகுமளவும், தவறிப் போனவனை நினைந்து நினைந்து அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமாய் ஒன்றேகால் ரூ. வெள்ளைப் புடவை யுடுத்தி மகளிரை அலங்கோலம் செய்துவிடு வதைப் பார்க்கும்போது, நினைக்கும்போது, யாருக்குத்தான் வயிறு பகீர் பகீரென்று பற்றி எரியாது? புருஷன் இறந்தால்

உடன் கட்டை ஏறுவதை சமூகம் நிறுத்தியவுடனே, ஆரம்பத்தில் எந்தப் புண்யவான் புண்யவதிக்கு இளம் கைம்பெண்களை இம் மாதிரியான கோலத்தில் வைக்கவேண்டுமென்ற யோசனை தோன்றிற்றோ? என்ன கோலம்? படைத்த ஆண்டவனுக்கும் கண்ணில்லையே.

சமுதாயத்தின் அதர்மத்துக்கும் இயற்கையின் கொடுமைக்கும் ஆட்பட்டு சித்திரவதை யடைந்துகொண்டிருக்கும் பால்ய விதவைகள் தன் கணவன் யார் எனவே தெரியாத பேதைகளாக மனித வர்க்கத்தின் காலடியில் அதல பாதாளத்தில் தள்ளப்பட்டிருக்கிறார்களே இது என்ன குலதர்மம்?

பாபமான வைதீக சித்தாந்தம். கேள்வி முறையற்றது. புராதன தர்மங்களையும் வர்ணாச்சிரம ஐதீக ஆச்சாரங்களையும் தழுவிநிற்கும் குடும்பப் பெரியார்கள் கட்டுப்பாடு ஒழுங்கு என்பது இல்லாமல் புட்டிபுட்டியாக மது வகைகளை விலாப்புடைக்க குடித்துக் குட்டிச் சுவராகும் மக்கள் விஷயத்தில் தனது ஆக்ஞைகளை ஏன் செலுத்தக்கூடாது? எந்த சமூகம் இதைக் கவனிக்கிறது? பஞ்சமா பாதகத்துள் ஒன்றான மதுபானத்தை "அருந்ினரை நஞ்சமும் கொல்வதல்லாமல் நரகினை நல்காதன்றே" என விஷத்தைச் சாப்பிட்டால் உயிர் மட்டும் உடலை விட்டுப்போகும்; மருவருந்துவதால் உயிர் பிரிவதன்றி நரகப்படுகுழியிலும் வீழ்த்துமென்பது பெரியோர் வாக்கு.

ஆணுக்கொரு ஞாயம் பெண்ணாய் பிறந்ததற்கொரு ஞாயமா? விபரீதம்? விபரீதம்? வைதவ்யமடைந்த மகளிர் கூட்டத்துக்கு புதிய ஜீவனை உண்டாக்கும் துடிப்பு தோன்றியிருக்கும் இக்காலத்தில் ஜாதிக் கொடுமையி லமிழ்த்தப்பட்ட பெரியார்களின் அக்னி ஜுவாலை வீசாமல் சாம்பல் மூடி இனி தணிந்துபோக வேண்டியதுதான் புது மாறுதலாகும்.

மகளிர் ஆபாசமான துர்க்கிருத்தியங்களில் மனதைச் செல்ல விட்ட பிறகு அபக்கியாதியால் அல்லலுறாமல் முன் ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ளவேண்டியது படித்த மக்களின் கடமை.

"துணிந்தாருக்குத் துக்க மில்லை" என்பதற் கேற்ப பால்ய விதவையான பருவ யுவதி இளமை இன்ப வேட்கை ததும்பி வாழ்க்கையின் இன்பம் நுகர ஆரம்பித்துவிட்டால், விஷயம் வெளிப்பட்டு, வெளியார் நகைக்க அபவாதமும் விபரீதமும் விளைவதைக்காட்டிலும் கௌரவமான முறையில் விரும்பும் இள மகளிருக்கு மறு விவாகம் செய்துவிடுவது சிறந்ததல்லவா? அவர்களின் துயரம் நம்முடைய துயரமாகும்.

---

## :: நிகழ்ச்சிகள் ::

### குப்பைத் தொட்டியில் குழந்தை

சென்னை தேவராஜ முதலியார் தெருவில் ஒரு குப்பைத் தொட்டியில் பிப்ரவரி 23உ காலை இரண்டு குழந்தைகளின் பிரேதங்களை ஒரு தோட்டி கண்டான்.

### சிந்து அசெம்பிளிக்கு ஸ்திரீ உபதலைவர்

பிப்ரவரி 25உ பிற்பகல் ஸ்ரீமதி குமாரி ஜோதி சிபாய் மிலானி சிந்து அசெம்பிளி டெபுடி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாஜி மந்திரியான ஸ்ரீ. முகி கோவிந்தராம் தீவிரமாகப் போட்டியிட்டார். இரு அபேட்சகர்களுக்கும் சம ஓட்டுகள் கிடைத்தன. சபைத் தலைவர் ஸ்ரீமதி குமாரிக்கு தமது ஓட்டை அளித்தார். இந்தியாவில் இந்த ஸ்தானத்திற்கு வரும் இரண்டாவது ஸ்திரீ இவரே.

### சேலத்தில் விதவா விவாகம்

பிப்ரவரி 15உ புதன்கிழமை யன்று காலை 9 மணிக்கு சேலம் ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி தேவஸ்தானத்தைச் சேர்ந்த வைஸ்ய தர்ம சத்திரத்தில் பெங்களூர் கண்டோன்மெண்டு ஸ்ரீ பி. சுப்பிரமண்யன் செட்டியார் என்பவருக்கும், திருக்கோவிலூர் தாலூகா விளந்தகரம், ஸ்ரீ ராஜகோபால செட்டியார் குமாரத்தி சௌ ரத்தினம்பாளுக்கும் விதவா விவாகம் ஆரிய ஸ்திரீ புனர்விவாக சங்கக் காரியதரிசி ஸ்ரீ எஸ். பி. ஆதிகேசவலு செட்டியார் மற்றும் பிரமுகர்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. சங்கத் தலைவர் ஸ்ரீ என். வி. கிருஷ்ணன் செட்டியார் தம்பதிகளுக்கு கதர் வஸ்திரங்கள் பரிசளித்தார்.

### சட்டசபையில் விவாகப் பிரிவினை

பிப்ரவரி 14உ யன்று டில்லி அசெம்பிளியில் முஸ்லிம் விவாக ரத்து மசோதா சட்டமாக்கப்பட்டது. அப்போது முஸ்லிம் ஜட்ஜுதான் இந்த வழக்குகளை விசாரிக்க

வேண்டுமென்று சையத் மூர்துஸா ஒரு திருத்தம் கொண்டுவந்தாராம். ஜனப் அப்துல் காயம் இதற்குப் பதில் கூறினர். ரயில்வே பிளாட்பாரங்களில் முஸ்லிம் ஜலம், ஹிந்து ஜலம் என்று இருப்பதே போதும். நியாயம் வழங்குவதிலும் அந்த வித்தியாசம் வேண்டாம் என்று சொன்னாராம். திருத்தம் தோற்று தீர்மானம் நிறைவேறியது. மிஸஸ் சுப்பராயன் கல்யாண விஷயத்தில் ஆண்களுக்கும் பெண்கட்கும் சம உரிமை வழங்கும் இம்மசோதா நிறைவேறியது பற்றி சபையினரை வாழ்த்தினர். கனம் சர்க்கார் "ஹிந்து ஸ்திரிகளும் முஸ்லிம்களாகி இந்த உரிமையை அடையலாம்" என்று வேடிக்கையாகக் கூறினர். யாவரும் சிரித்தனர். பெண்கள் மதம் மாறினாலும் விவாகரத்து செய்யக் கூடாதென்றும் அது ஆண்கட்குத் தான் உரிமையென்றும் யாமின்கான் சொன்னர்.

## பெண் மக்கள் கவனிக்க

"காய்கறிகளை சமைப்பானேன்? சமைத்து, சத்து போக்கப்பட்ட கறிகளைவிட பச்சைக் காய்கறிகளே உண்ண உண்ணத் தெவிட்டாதவை. செத்துப்போன காய்கறிகளைவிட இவைகளே அதிக ஜீவன் அளிக்கும். பட்டாணி அவரை உருளைக்கிழங்கு போன்ற சில காய்கறிகளை சமைப்பதாவது அவசியமெனலாம். ஆனல் காலிபிளவர் முதலிய பசுங் கீரைகளையும் வேர்க்கிழங்குகளையும் சமைப்பானேன்? பெண்கள் காய்கறிகளை ஓயாமல் அலம்புகிறார்கள். தோல் உரிக்கவேண்டிய அவசியமில்லாத கிழங்குகளின் தோலை சிரமப்பட்டு உரிக்கிறார்கள். கிழங்குகளின் தோலுக் கடியிலுள்ள முக்கியமான உப்புகளையெல்லாம் இவ்வாறு தூர எறிந்த பின்னர் அதைக் கொதிக்க வைத்து சமைத்து இருக்கிற சத்தையும் போக்கடித்து விடுகின்றனர். வேகவைப்பதால் பசுங் காய்கறிகளிலுள்ள உப்புச் சத்து நீரில்போய் விடுகிறது. முட்டைக் கோஸ் முதலியவைகளை வேகவைத்துச் சாப்பிடுவது வெறும் பழக்கத்தினாலே தான். காய்கறிகளைப் பச்சையாகச் சாப்பிட்டுப் பாருங்கள். பிறகு சமைக்கவே மாட்டீர்கள்" என்று எலியனர் ஸிங்கிளேர் என்பவர் 'கண்ட்ரிமென்' என்ற பிரிட்டிஷ் பத்திரிகையில் எழுதுகிறார்.

## தாய்மார்களின் உணவு

காய்கறிகள் உண்பதால் தாய்ப்பால் அவ்வளவாக சேர்ப்டுவதில்லை. ஆனல் பால், ரொட்டி, தித்திப்பான பழவகைகள், பருப்புகளிவற்றை யுண்பதால் நுரைக்கும் பால் அதிகரிக்க மிகுந்த வசதியுண்டு என்றும், பிரசவிக்க இருக்கும் ஸ்திரீகளுக்கு பிரசவத்துக்கு முன் நான்கு மாதகாலத்திற்கு மாமிச உணவையும் டீ, காபியையும் தவிர்த்து, பால், பழங்கள், மோர், சுத்த நீர் இவற்றைக் கொடுத்து போஷித்ததில் வெகு நல்லபலன் கிடைத்ததாகவும் டாக்டர் கிரெஸ் எழுதுகிறார்.

## வரதக்ஷிணை தடை மசோதா

பிப்ரவரி 14உ சிந்து சட்டசபையில் வரதட்சிணைத் தடை மசோதா விவாதத்துக்கு வந்தது. ஸ்திரீ விசிட்டர்கள் பலர் வந்திருந்தனர்.

வரதக்ஷிணைக் கொடுமையால் பல குடும்பங்கள் அழிந்து வருவதாகவும், பண மில்லாமையால் யுக்த வயதடைந்தும் எத்தனையோ பெண்கள் விவாகமாகாம விருப்பதாகவும் அங்கத்தினர்கள் பலர் கூறினர்கள். மிஸ். ஜெதிமலானி, பெண்களுக்கு வார்சுரிமை அளித்துவிட்டால் இத்தொல்லை நீங்குமெனக் கூறினர். மசோதா தனிக் கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்பட்டது.

## செங்குந்தர் சமூகத்தில் மறுமணம்

தென்னிந்திய செங்குந்தர் மகாநாடுகளின் தீர்மானத்தை பின்பற்றி திருநெல்வேலி ஜில்லா சங்கரநயினர் கோவில் கஸ்பா தோழர் வீ. ச. ஆ. வே. வேலாயுத முதலியார் அவர்களுக்கும் ஷை ஜில்லா பாம்புக் கோயில் சந்தை தோழர் ப. சுப்பம்மாள் அவர்களுக்கும் 10-2-39ல் திருப்பரங்குன்றத்தில் மறுமணம் மிக்க மங்களகரமாக நடைபெற்றது. ஷை மணத்திற்கு தமிழறிஞர் பலரும் தேசபக்தர்களும் சீர்திருத்த வாதிகளும் விஜயம் செய்து தம்பதிகளை வாழ்த்தினர்கள். உபசாரப் பத்திரங்களும் நல்கப் பெற்றன.

## இளமை மணம் தடுக்கப்பட்டது

சென்னை திரு. திருவேங்கடசாமி நாயுடு குமாரி சௌ. சியாமளா தேவிக்கும், ஸ்ரீ எஸ். பி. வெங்கட்டராமுலு விற்கும் மார்ச் 2உ விவாகம் நடத்த ஏற்பாடாகியிருந்தது. திரு. கே. ராதாகிருஷ்ண நாயுடு கல்யாணத்தை நிறுத்த வேண்டுமென்று மாஜிஸ்ட்ரேட்டுக்கு ஒரு மனு கொடுத்தார். அதில் மணமகன் தம்முடைய சகோதரியை மணந்துகொண்டாரென்றும், பிள்ளை பிறக்காததால் மறு விவாகம் செய்ய முயற்சித்தாரென்றும் புகார் கூறியுள்ளார். பெண்ணுக்கு 16-10-39ல்தான் 14 வயது ஆவதால் அதுவரை கல்யாணத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென்று மாஜிஸ்ட்ரேட் தடையுத்தரவு பிறப்பித்தார்.

## கிழவனின் பெண் மோகம்

ஹிராலால்தே என்பவன் ஐம்பது வயதுக் கிழவன். தன்னைகலால் இன்ஸ்பெக்டர் என்று சொல்லிக் கொண்டு ஷிர்வானி என்ற பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள முயன்று கொண்டிருந்தான். கலியாணத்திற்கு ஒரு வாரம் முன்னர் மோசம் வெளியாகிவிட கம்பி நீட்டிவிட்டான். போலீசார் அவனைப் பிடித்துவிட்டனர். ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

## பெண் டிக்கட் பரிசோதகர்கள்

கிழக் கிந்திய ரயில்வே லயன்களில் பெண் டிக்கட் பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

## 71-க்கு 28!

71 வயதான 'எம்மா காலின்ஸ்' என்னும் கிழட்டு விதவை, 28 வயதான 'வில்லியம் ஜாக்' என்பவனை விவாகம் செய்துகொள்ள நிச்சயித்து ஏற்பாடுகள் செய்துவிட்டாள். மணமகளுக்கு 8 குழந்தைகள்; 25 வருஷ விதவையாக இருந்துவந்த காலின்ஸுக்கு சென்ற 5 மாதமாக 'ஸ்ரீ ஜாக்' என்பவனுடன் பழக்கம் ஏற்பட்டது. அவனை விவாகம் செய்துகொள்ள ஏற்பாடு செய்துவிட்

டால், விவாகம் ஆக்ஸ்போர்டுஷய ரில் லூக்னரில் நடைபெறும்.

## பெண் கல்வி வளரவேண்டும்

சென்னை மாகாண கல்வி மந்திரி பின்வருமாறு கூறினர்: பெற்ரோர்கள் சமூகக் கட்டுப்பாட்டை அறவே மறந்து விட்டு மாணவிகளை உயர்தர வகுப்புகளிலும் படிக்கும்படி செய்யவேண்டும். பெண்கல்வி நம் நாட்டில் எவ்வளவு பரவுகின்றதோ அவ்வளவு தூரம் சமூக முன்னேற்றம் ஏற்படும் என்பதை ஒவ்வொரு பெற்ரோரும் உணரவேண்டும்.

## குன்றக்குடியில் விதவை மணம்

காரைக்குடி சௌத் இந்தியா கார்ப்பொரேஷனில் வேலை பார்த்துவரும் வைத்தீஸ்வரன் கோவில் ஸ்ரீ. ஆர். சாம்பசிவ அய்யருக்கும், விளாத்திகுளம் ஸ்ரீமதி சிவகாமி அம்மாளுக்கும் (விதவை வயது 20) 10—2—39 வெள்ளிக்கிழமை, குன்றக்குடி சுப்பிரமணியர் கோவிலில் எவ்விதப் புரோகிதச் சடங்குமின்றி, சீர்திருத்த முறையில், மணம் நிகழ்ந்தது. அன்று மாலை மணமகன் தமது இல்லத்தில் நண்பர்கட்கு ஒரு விருந்து நடத்தி உபசரித்தார்.

## பெண் அடிமை காட்டுமிராண்டித்தனம்

மகாத்மா காந்தி பின்வருமாறு எழுதுகிருர்:—

"குடும்பத்தில் பெண்கள் எந்த விதமான வேலையில் ஈடுபட்டிருக்கிருர்கள்? ஒரு சிலர் தவிர அநேகமாக எல்லாப் பெண்களும் குடும்பத்திற்கு அத்யாவசியமான கடமைகளைச் செய்வதிலேயே நாள் முழுதும் ஈடுபட்டிருப்பதில்லை. அவர்களுடைய எஜமான்கள் அல்லது கணவன்மார்களின் அகம்பாவம் பிடித்த இன்பங்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கவும் தங்களை ஜம்ப்மாகச் சிங்காரித்துக் கொள்ளவுமே காலத்தைக் கழிக்கின்றனர். இப்படிப் பெண்கள் குடும்பத்தில் அடிமைப்பட்டிருப்பதைக் காட்டுமிராண்டித்தனமென்று நான் கருதுகிறேன். பெண்கள் அடுப்பங்கரையிலேயே நாள் முழுதும் கிடப்பதை காட்டுமிராண்டித்தனத்தின் ஓர் அம்சமென்று நான் சொல்கிறேன்."

## "வருங்கால சந்ததியின் வாழ்வு ஸ்திரீகளைப் பொறுத்தது"

ஸ்ரீமதி பீகம் சுல்தான் அமிருதீன், பாளையங்கோட்டையில் சுகாதார பொருட்காட்சியைத் திறந்து வைக்கும் பொழுது குறிப்பிட்டது:

ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும், இம்மாதிரி பொருட்காட்சி மிக மிக உபயோக காமானது. வருங்கால சந்ததியின் வாழ்வு தாய் எவ்வளவு சுகமாக வாழ்கிருளோ அதைப் பொறுத்திருக்கிறது. ஆகவே சுத்தமாய் ஆரோக்யமாய் வாழும் மார்க்கங்களை தாய்மார்களுக்குப் போதிக்கவேண்டியது அவசியம். குழந்தையை வலுவுள்ள தாயும், ஆரோக்யமுள்ள தாயும் வளர்க்கவேண்டும். பள்ளிக்கூடத்திலிருந்து மாணவ மாணவிகளுக்கு ஆசிரியர்கள் சுகாதார முறைகளைக் கற்பிக்க வேண்டும். சுத்த

மாய் வரும் மாணவ மாணவிகளுக்கு வெகுமதி கொடுக்கவேண்டும்.

கனம் சுகாதார மந்திரி, ஸ்திரீகள் சுகாதார சட்டம் அமுலுக்கு வருவதில் ஒத்தாசை செய்யும்படி என்னைக் கேட்டுக்கொண்டதற்கு - ஸ்திரீகள் நம் நாட்டு சுகாதாரத்துக்கு ஒத்துழைக்கத் தயாராகவே இருக்கிறார்கள்என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஹிந்து விவாக சீர்திருத்தம்

பிப்ரவரி 27உ. நடந்த டெல்லி ராஜாங்க சபைக் கூட்டத்தின் நடவடிக்கை:

"ஹிந்து விவாகங்கள் மத சடங்குகள் பிரகாரம் நடக்கும்படியும் விவாகங்கள் ஏகதாரமாகவே இருக்கும்படியும் சில நிலைமைகளில் விவாகங்கள் ரிஜிஸ்டர் செய்யப்படவும் ரத்து செய்யப்படவும் சட்டம் நிறைவேற்றுவதுபற்றி விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டும் என்று ஸ்ரீ பி. என். சாப்ரூ ஒரு தீர்மானத்தைப் பிரரேபித்தார்.

அந்த மெம்பர் பேசுகையில், "ஹிந்துக்களில் பெரும்பான்மையான விவாகங்கள் ஏகதார விவாகங்களே. பணக்காரர்களே பலதாரங்களைக் கட்டிக்கொண்டு பெண்களின் அந்தஸ்தைத் தாழ்த்தி விடுகிறார்கள். இஷ்டப்பட்டவர்கள் கலியாணங்களை ரிஜிஸ்டர் செய்து கொள்ளலாம் இக்காலத்தில் விவாகரத்தும் அவசியம்" என்றார்.

ஹிந்து விவாகங்கள் எல்லாம் ஏகதாரமாகவே இருக்கவேண்டுமென்றும் கோர்ட்டுகளால் விவாகரத்து செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் ஸ்ரீ லால் மோதிலால் ஒரு திருத்தம் கொண்டுவந்தார்.

ஸ்ரீ. ராமதாஸ் பந்துலு பலதார விவாகத்தைக் குறிப்பிட்டு சொன்னதாவது:—

"அக் கெட்ட வழக்கம் நம் நாட்டில் இருந்து வருகிறது. சமூகத்தில் படித்த பெண்களின் அதிகரிப்பால் பலதார விவாகங்கள் மேற்கொண்டு அதிகரித்துள்ளன. அடிக்கடி இந்தப் படித்த இளம் பெண்கள் கர்னாடகமாக விருக்கும் மனைவிகளிடமிருந்து இளம் கணவன்மார்களை வசீகரித்து இழுத்துக் கொள்கிறார்கள்"

உள் நாட்டு இலாகா காரியதரிசி, கமிட்டி நியமித்தால் ஏராளமான செலவு பிடிக்கும் என்று சொன்னார். தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

## பெண்கள் முன்னேற்றம்

"இந்தியாவில் தலைமுறை தலைமுறையாக பெண்கள் ஆண்களுடன் சரிநிகர் சமானமாக வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஆகையால் அவர்களுடன் சேர்ந்து வேலை செய்வது எங்களுக்குப் புதிதல்ல. மேல்நாட்டில் பெண்கள் ஆண்களுடன் போட்டிபோட்டு, அவர்களைப் பின்னே விட்டுவிட்டு, முன்னேறுகின்றனர். ஒரு தேசம் முன்னேற வேண்டுமானால், ஆண்களோ பெண்களோ மற்றவர்களைத் தள்ளிவிட்டுச் செல்லலாகாது. இருவரும் சமமாக முன்னேறவேண்டும்'—கனம் விஜயலக்ஷிமி பண்டிட்

# சமூக சீர்திருத்தப் புத்தகங்கள்.

## "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு சகாயம்.

### கைம்பெண்ணின் கண்ணீர்.

இது ஆசிரியர் கே. வி. எஸ். வாஸ் அவர்களால் எழுதப்பட்டு மாதர் மறுமண சகாய சங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் விதவைப் பெண்கள் படுந்துயரமும் அதற்குச் செய்யவேண்டிய பரிகாரமும் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளன. விதவா விவாகம் சுருதி-யுக்தி- அனுபவபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டதென்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இக்கட்டுரை முதலாவது பரிசு பெற்றதாகும். விலை அணு ஒன்று. தபாற் செலவு வேறு.

### மான நஷ்ட வழக்கு.

இது பெண்ணுக்குப் பணம் வாங்கிச் செய்ததற்காக பெண்ணின் தம்பி மைனர், மேஜரான பிறகு தன் குடும்பத்திற்கு அவமானம் வந்துவிட்டதென்று கோர்ட்டில் வழக்கிட்டு நீதிபெற்றதாக எழுதப்பட்ட ஒரு சிறு நூல். கோர்ட் நடவடிக்கையும் மலைவிழுங்கி முத்தப்ப செட்டியாரின் விசாரணை விவரங்களும் தீர்ப்பும் படிப்பவர்க்கு வெகு உற்சாக மூட்டக் கூடியன. விலை அணு ஒன்று. தபாற் செலவு வேறு.

### சொர்னவல்லி.

இதில் அடுத்தாள் வேலையின் அவஸ்தை, பிரிந்த காதலர்களின் பெருந் துன்பம், தீர்த்த யாத்திரைக்குப் பெண்கள் சென்று படும்பாடு, பச்சிளம் பெண்கள் விதவையராக்கப்படும்கஷ்டங்கள் முதலிய பகுதிகளும், விதவைப் பெண் வைக்கும் ஒப்பாரியும் படிப்பவர் உள்ளத்தை உருக்கிவிடுவது திண்ணம். உபந்யாசங்களும் மேற்கோள்களும் சந்தர்ப்பத்துக்கேற்ற இனிய பாட்டுக்களும் நிறைந்து விளங்கும். எளிய அழகான நடையில் அமைந்துள்ளது. இதன் விலை ரூ. 1—0—0. "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—12—0. தபாற் செலவு வேறு.

### அமிர்தவல்லி மாலை.

இது நகரத்தார் பெருமையையும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும் விளக்குகிறது. பால்யப் பெண்களை மணம் செய்வதும் அதை விதவையாக்கிக் கண்ணீர் வடிப்பதும் எவ்வளவு கொடுமை யென்பதையும், அதனாலேற்படும் இன்னல்களையும் படிப்பவர் மனத்தில் பசுமரத்து ஆணிபோல் பதியச் செய்யும்படி அமைந்துள்ளது. யாவரும் எளிதில் பாடக்கூடிய இனிமையான அம்மானைப் பாட்டில் பாடப்பட்டிருக்கிறது. விலை 0—4—0. 'மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—3—0. தபாற் செலவு வேறு

**மானேஜர், மாதர் மறுமணம் ஆபீஸ், காரைக்குடி.**

REGD. NO. M. 3603.

# சிறந்த புத்தகங்கள்.

## மாதர் மறுமணப் பாடல் திரட்டு.

இது ஒரு சிறந்த பாடல்புத்தகம். இதில் 27-பாடல்கள் அடங்கியுள்ளன. இலக்கியப்பாடல்களும், புதுவகையான மெட்டுப் பாடல்களும் நிறைந்திருக்கின்றன. 64-பக்கமுள்ள இப் புத்தகத்தின் விலை இரண்டணாதான். தபாற்கூலி வேறு.

## ஜீவகாருண்யத் திருக்குறள்.

"வள்ளுவர் பாட்டின் வள முரைக்கின் வாய்மடுக்கும்" என்று புகழப்படும் திருக்குறளிலிருந்து ஜீவகாருண்ய சம்பந்தமான 20 குறளைப் பொறுக்கிப் பெரிய எழுத்தில் பொழிப்புரையுடன் அச்சிடப் பட்டிருக்கிறது. பள்ளிக்கூட மாணவர் பயில்வதற்கு மிக இன்றியமையாதது. விலை அணா அரை. மொத்தமாக வாங்கினல் விலை சகாயமாகத் தரப்படும். தபாற்கூலி வேறு.

## மாதர் மறுமணம்.

இப் பெயர்கொண்ட அழகிய புத்தகம் மகிபாலன்பட்டி திருவாளர் மு. சின்னையா செட்டியாரவர்களால் இயற்றப்பெற்றது. அழகான நடை. நகரத்தார் சமூகத்திற்கு மாதர் மறுமணம் எவ்வளவு அவசியமென்பதற்குக் காரணங்களைப் பசுமரத்தாணியெனப் பதியும்படி எழுதியிருக்கிறார்கள். உதாரணமாகக் கூறப்படும் எழு கதைகள் வியக்கத்தக்கனவாகும். அழகான புத்தகம் விலை 0—4—0 "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு 0—3—0. தபாற் செலவு வேறு.

## காசில்லாமல் உபதேசம்.

பஞ்சாட்சர உபதேசம் செய்வதற்கு ஆடம்பரமும் அனுவசியமான தடபுடலும் வேண்டியதில்லை யென்பதற்கு வேண்டிய காரணங்கள் இதில் விளக்கப் பட்டிருக்கிறது. அதோடு தண்ணீர் மந்திரமும் இதில் சொல்லப் பட்டிருக்கிறது. விலை அணா ஒன்று. தபாற்கூலி வேறு.

## மாதர் மறுமணம் பென்ஸில்

"விதவை மணமே விடுதலை அளிக்கும்" என்னும் வாக்கியம் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ள அழகான பென்சில். நல்ல நிறம். சுகமாக எழுதக்கூடியது. இந்தியாவில் செய்யப்பெற்றது.

| | |
|---|---|
| விலை பென்சில் 1-க்கு | 0—0—6 |
| டஜன் 1-க்கு | 0—5—0 |
| குரோஸ் 1-க்கு | 3—6—0 |

தபாற்செலவு வேறு.

Printed and Published by S. MURUGAPPA for the Mathar Marumana Sahaya Sangam at Kumaran Power Press, Karaikudi.
Editor: M. Maragathavalli.